ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரூ. 5 தனிப்பிரதி 0—1—3 REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 27—1—1946 | இதழ் 41

## ★ பெரியார் சொல்வதைக் கேட்டால் பெரிய தலையாய்விடும் ★

—(கைவல்யம்)—

அண்ணா! முந்தின கட்டுரையில் நான் சொன்னதைக் கேட்டாய். அதனால் உன்வருத்தமும் கோபமும் சாந்தப்பட்டிருக்கும். சின்னத்தலை போகக்கூடிய காரணங்களையும் உணர்ந்திருப்பாய். எல்லா மனிதர்களுக்கும் மரணமுண்டு, மரணத்திற்குப்பின் என்னாவோம்என்கிற எண்ணமும் தோன்றுகிறது; அதனால் மோட்சஞான விருப்பத்திற்கு அடிமைப்படுகிறார்கள். இது சமய சாத்திரங்களுக்குள் இருக்கிறதென்றும்சாத்திரங்கள்மோட்சஞானத்தின் களஞ்சியங்கள் என்றும் பெரும்பான்மையாக எல்லோருக்கும் தெரியும் படியாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் ஒன்றுக்கும் உதவாததாயினும், ஒரு சுவடியை வைத்துக்கொண்டு நீங்கள்விரும்புகிறபொருளைச் சேமித்துவைத்திருக்கிறகளஞ்சியம் இதுவே; சர்வசம்பத்தும் மோட்சமும் இதற்குள் அடங்கியிருக்கிறது; கடவுள் சொன்னதும் இதுவே; நாங்கள் சொல்லுவதும் அதுதான் என்று இவ்வாறுபுகழ்ந்து கூறி மக்களை நம்பச்செய்து அந்தச் சுவடியைப் பொதுமக்களுக்குத் தெரியாத மொழியில் எழுதிச், சொல்லுவதைக்கேட்கவேண்டுமே யல்லாமல் யாரும் படிக்கக் கூடாதென்கிறசட்டதிட்டங்களும் இருந்தால், அந்தச்சுவடியும்மொழியும் எவன்வசம் இருக்கிறதோ, அவனுக்குமக்கள் அடிமையாகவேண்டும். அப்படி அடிமையாகிறவர்களை எல்லாம் சின்னத்தலையாகத் தானே மதிப்பார்கள்.

“அந்தவேதம் என்கிற ஏடுபிராமணர்களாகிய எங்களுக்குச்சொந்தமாகக் கடவுளால் தரப்பட்டது; எல்லா விருப்பங்களும் தரவல்லது” என்றும் சொல்கிறார்கள். அந்தஏட்டைச் சொல்லுகின்ற சூத்திரனுடைய நாக்கை அறுத்தெறியவேண்டும்; அதன்பொருளை உணர்ந்து வைத்திருக்கிற நெஞ்சைப் பிளக்கவேண்டுமென்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறதாகவும்; சூத்திரன் நடமாடுகிறஇடம்சுடுகாடானதால், அவன்பக்கம் வேதம் ஓதக்கூடாதென்றும் சொல்கிறார்கள். இந்தவிதமாக எழுதியிருக்கும் வேதம், அதை எழுதிக்கொடுத்த கடவுள், அதனால் மக்களையேய்த்துப் பாடுபடாமல் வாழ்க்கைநடாத்தும் ஒரு சாதி, அந்தச்சாதிக்குக் காணிக்கைவைத்துக் காலில் விழுந்து ‘என்பாவத்தைத் தீர்த்துவிடு,’ எங்கள் முன்னோர்களைச் சொர்க்கத்துக்கு அனுப்புங்கள்’ என்றுகேட்கும்சின்னத்தலைச்சாதி ஆகிய இந்த ஏற்பாடுகள் எந்த நாட்டிலேனும் இருக்கின்றனவோ? இதைஎல்லாம் பார்த்துத்தான் “பற்பலநாட்டிலும் பார்ப்பார் இலையால்” என்றார் கபிலர்.

அறிவு, மனிதருக்கெல்லாம்பொது என்பதை உலகமெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறது. அனுபோகமும் அப்படியே இருக்கிறது. அவை நமது நாட்டில் அங்கீகரிக்கப் படுகிறதா? இல்லையே! அங்கீகரித்தால் சின்னத்தலை—பெரியதலை என்று எப்படி உண்டாக்கமுடியும்? சிறந்த வாழ்வும், பரந்த அறிவும் சூத்திரனான சின்னத்தலைக்குக் கிடையாதென்று அந்த ஏடுசொல்லுவதாக விதியும் போட்டார்கள். அந்த விதியை மீறினவர்களைத் தண்டிக்க, அந்த ஏட்டை எழுதிக்கொடுத்த கடவுள் உடனே அவதாரம் எடுத்துப் பூலோகத்திற்குவந்து, அந்த விதியை மீறினவர்களையெல்லாம் கொன்று குவித்தும் இருக்கிறார். அதைச் சரித்திரமாக எழுதி, இதிகாசம் என்கிற பெயர்கொடுத்து, நமது பண்டிதர்களிடம்ஒப்படைத்தும் இருக்கிறார்கள். பண்டிதர்கள் நமக்கெல்லாம் போதித்தும் இருக்கிறார்கள். இதில் எதையாவது ஒன்றைக் குற்றம் சொன்னால்' நம்மை எல்லாம் சின்னத்தலைஎன்கிறார்கள். நமது பெரியபண்டிதர்களான சின்னத்தலைகளோ பக்கவாத்தியமாக வந்துவிடுகிறார்கள். தெய்வம்—வேதம்—இதிகாசம்—புரோகிதன்—நமதுபெரியபண்டிதர்கள் ஆகிய இத்தனைபேர்களும் நாம் எல்லாம் சின்னத்தலை என்பதற்குக் கர்த்தாக்களாக இருப்பது மல்லாமல், சாட்சியாகவும் வந்துகொண்டே இருக்கிறார்கள். இதற்கு யாரைக் கோபிப்பது? யாரைக்கேட்பது?

நமது கடவுளைக்கண்டு கேட்கலாமென்றால், அவர் எங்கேஇருக்கிறாரோ, யாருக்குத்தெரியும்? உள்ளத்தைக் கடந்து அப்பால் இருப்பார் என்றும் சொல்லுகிறார்கள். ஒருசாதிக்கு இன்னொருசாதி தாசிமகன்—அடிமை என்று ஏடுஎழுதின கடவுள் நியாயஸ்தராக இருக்கமுடியுமா? அவரிடத்தில் நடுநிலைமையும், தன்மையும் காணமுடியுமா? வேதத்தைக் கேட்கலாமா? அதுபேசாதே! வேதமோ, ஒன்று சொன்னபடி இன்னொன்றில்இருக்காதே! குருக்களிடம்கேட்கலாமா? குருக்களோ கடவுள் பேராலும், வேதத்தின் பேராலும் அல்லவா பிழைக்கிறான். நமதுபெரிய ஆராய்ச்சிப் பண்டிதர்களைக் கேட்கலாமா? “பதினான்கு சித்தாந்த சாத்திரத்திலும் சின்னத்தலைபெரியதலைஇருக்கத்தானே செய்கிறது; எங்கள் சைவசமய ஆசிரியரின் வயதோ குறைவு, எண்பது வயதுடைய அப்பர்சுவாமிகள் அவரைச் சாஷ்டாங்கநமஸ்காரம்செய்தார்; திருஞானசம்பந்தர் வாரியெடுத்து அணைத்துக்கொண்டார், சின்னத்தலை—பெரியதலை அதிலேயே இருக்கிறதே. அதை நாங்களும் ஒப்புக்கொண்டு தினம் பாராயணமும் செய்கிறோம், பொன்னுக்கு ஒருவன்பாடினான்; புகழுக்கு ஒருவன்

(அடுத்த பக்கம் பார்க்க)

## கருணை காட்டுக.

★

“கலைஉலகில் கப்பியுள்ள காரிருள் நீங்கவும், தமிழர் உள்ளத்தில் மீண்டும் இன்பம் பொங்கவும், பாகவதர்—கிருஷ்ணன் விடுதலைசெய்யப் படவேண்டும்; இது கட்சிபேதமற்ற கருத்து; இதனைப் பொதுமக்கள் ஆதரிக்கின்றனர்; வேறு எவ்வளவோ பிரச்னைகளிலே கருத்துவேற்றுமை கொண்டுள்ளவர்கள், இந்த விஷயத்திலே ஒன்றுபட்டுக், கருணைகாட்டுக, என்று சர்க்காரை வேண்டுகின்றனர்” என்பது, வெறும் வார்த்தைகளல்ல—நாட்டு நடவடிக்கை.

சென்னை, இந்தக்கருத்தைத் திறம்படச் சித்தரித்துக் காட்டிற்று, 20—1—46 மாலை மெமோரியல் மண்டபத்தில்.

கருணை காட்டு! கலைவாணரை மீண்டும் எமக்குத்தருக!—என்று, சனாதன திவான்பகதூர் இராமசாமி சாஸ்திரியாரும், சுயமரியாதை இயக்கத் தோழர் டி. சண்முகமும், ஒரேமேடையில் நின்றுகேட்டனர்! சென்னை முன்னாள் மேயரும் காங்கிரசாருமான தோழர் எம். இராதாகிருஷ்ணப் பிள்ளை தலைமை வகித்தார். காங்கிரஸ்தோழர்கள் கத்தே ரங்கய்யநாயுடு, “லோகோபகாரி” முன்னாள் ஆசிரியர் நெல்லையப்பர், ஆகியோர், “பாகவதர்—கிருஷ்ணன், நாட்டுப் பொதுச்சொத்து! அதனைச்சிறையிலேபூட்டி வைத்திருப்பது நாட்டுக்கு நஷ்டம்; நமக்கு ஏற்பட்டுள்ள சொல்லொணாக் கஷ்டத்தை நீக்க, சர்க்கார் கருணைகாட்ட வேண்டும்” என்றுஉருக்கமுடன் பேசினர். வித்வான் நடேசனார், ‘அருங்கலைவாணர்களாம் பாகவதர்-கிருஷ்ணன் இருவரும், அளப்பரிய கலைத்தொண்டும், பொதுத் தொண்டும் புரிந்தவர்கள்; அவர்களின் சிறைவாசம் தமிழகத்தில் தாங்கொணாத் துயரைத் தந்துவிட்டது. அரசினர், தமிழரின் மனப்புண் போக்க, அவ்விரு கலைமணிகளை விடுதலை செய்யவேண்டுகிறோம்” என்றுரைத்தார். “கோயிலும் பிராகாரமும், பூஜாபாத்திரங்களும், அர்ச்சகர்களாகிய நாங்களும்இருக்கிறோம், ஆனால் அங்கு கொலுவீற்றிருந்த இரண்டு விக்ரஹங்கள்காணோம்; வெறும் கோயிலில் உலவுகிறோம். கலைஉலகின் விக்ரஹங்களாய் விளங்கிய, பாகவதர்—கிருஷ்ணன், ஆகிய இருவர் மீண்டும் நம்மிடை வந்தால்தான், கலைக் கோயில் பிரகாசிக்கும்” என்று டைாக்டர் கே. சுப்பிரமணியம் அவர்கள் கூறினார். மற்றும், தோழர்கள் கே. எ. பி. விசுவநாதன், டாக்டர் தருமாம்பாளம்மையார், இந்திராணி பாலசுப்பிரமணியம். எஸ். வி. லிங்கம். சி. என். அண்ணாதுரை ஆகியோர்பேசினர். துவக்கத்தில் தோழர் கே. ஆர். செல்லமுத்துவும், முடிவுரையின்போது தோழியர் சந்திரலேகாவும் கீதம் பாடினர். தோழர் தெய்வசிகாமணி ஆச்சாரியார், கேட்போர் உள்ளம் உருகும்படி பேசி, “எப்பாடுபட்டேனும் அவ்விருவரும் நாட்டிலேமீண்டும்உலாவி, இசைபரப்பி, கலைபரப்பித்தொண்டுபுரிய வழிகண்டாகவேண்டும். இதுவே என் தொண்டு; இதற்கே நான் உழைப்பேன்; இதற்காகவே, எங்கும் செல்வேன், எவரையும் வேண்டுவேன், அயரேன், வெற்றிகிட்டும்வரை உழைப்பேன்—”என்றுகூறி, மற்றையோருக்கு உற்சாகத்தையும் நன்றியையும் கலந்தளித்தார். பெரிய கூட்டம்: அன்பு பொங்கி வழிந்தது. அக்கூட்டம் ஓர் “சர்வ கட்சி மாநாடு” என்றே கூறலாம். வேறு அலுவலில் இருந்ததால் வரமுடியவில்லை, கூட்டம்வெற்றிகரமாக நடைபெறவேண்டுகிறோம், கலைவாணர்களுக்குச் சர்க்கார் கருணைகாட்ட வேண்டுகிறோம், என்று பெரியார் ஈ. வெ. இராமசாமி, ஆந்திரப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் சர். சி. ஆர். ரெட்டி அவர்கள், புதுக்கோட்டை உயர்நீதி மன்ற அதிபர், பல ஜில்லா போர்டு, நகராட்சி மன்றத்தலைவர்களாகியோர், செய்திக் கடிதங்கள் அனுப்பினர்.

தமிழகம் எங்கும் இம்முயற்சி நடைபெறுகிறது. எக்கட்சியினராயினும் இதிலே கட்சி பேசாது, கருணை கோருகின்றனர். கருணை என்று வரும்; கலைவாணர் இருவரும் மீண்டும் என்று காட்சி அளிப்பர் என்று தமிழகம் கேட்கிறது.

மற்றும், மதுரை முனிசிப்பாலிட்டியிலும், இராசிபுரம் பஞ்சாயத் போர்டிலும் கலைஞர்பால் கருணைகாட்டி விடுதலைசெய்யுமாறு அரசாங்கத்தாரைவேண்டித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ உழைப்பால் உலகு! உலுத்தர் வாழவா? ★



உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணசுவாமி கோவில் தெரு,
உறையூர் p.o. திருச்சி.


## பெரியார் சொல்வதைக் கேட்டால்

*1-ம் பக்கத் தொடர்ச்சி*

பாடினன்; தன்னையே பாடிக் கொண்டான் ஒருவன்; என் அப்பன் என்னைப்பாடினன் என்றுசிவபெருமான் சொன்ன தனிப்பெருமையல்லவா, அப்பர் சுவாமிகளுக்கு. இன்றைக்கும் அவர் பின்னால் வேதம் சொல்லிக்கொண்டு போவதை ஆட்சேபிக்கிறார்களே! வழக்கமான கூலிக்குமேல் எட்டணா அதிகம் கொடுப்பதாகத் தர்மகர்த்தாக்கள் சொன்னால் அதையும் செய்கிறார்கள். அப்பரே சின்னத்தலையாக இருக்கையில், இதற்கு நாங்கள் என்ன செய்வோம், என்கிறார்கள். ஐயமில்லாமல் தெய்வ அருள் பெற்ற சேக்கிழார். நான் சின்னத் தலையிலும் நல்ல சின்னத் தலையில் உதித்தவன்" என்று சொல்லியும் விட்டார். அருள்பெற்ற கவிக்கம்பர் அந்தணர்களைப் பேணுதிஉள்ளத்தால், என்றுப் சொன்னார் அதுவுமன்றி, ஆரியப் பெரியதலையைத் திராவிடச் சின்னத்தலையில் பதித்த பெருமையுடைய கம்பரைக்குற்றம் சொல்லுகிறவர்களையெல்லாம் சபித்துவிடுகிறேன் என்று, ஆராய்ச்சிப் பண்டிதரான சேதுப் பிள்ளை அவர்கள் சொல்லுகிறார்.

நம்மை சின்னத்தலைஎன்பவர்களைக் கேட்டாலோ, நாம் சின்னத்தலையாக இருப்பதற்குப்பல பிரத்தியட்சப்பிரமாணம் சொல்லுகிறார்கள். அவற்றில்சிலவற்றைத்தான்இங்கே சொல்ல இடமுண்டு. "நீங்கள் எல்லாம் சின்னத்தலைஎன்பது எங்களுக்குப்பட்டாச்செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது; பலபத்திரங்களும்எழுதப்பட்டிருக்கின்றன, அதுபோகப் பாத்தியதைஎங்களுக்குஅநேககாலத்துக்குமுன்னேவந்துவிட்டது'என்கிறார்கள். நீங்கள் சின்னத்தலையல்லவென்றால்,இராமேஸ்வரத்தில்பல சாஸ்திரிகளைப்பணக்காரர்களாக்குவீர்களா? பலஊர்களில்ஒன்றுக்கும் உதவாமல் ஒழுக்கம் கெட்டு சோம்பேறிகளாய்த்திரிந்த பார்ப்பனர்கள் இராமேஸ்வரத்தில் ஒன்று கூடி அங்கிருக்கும் சாஸ்திரிகளுக்குள், பாத்தியவாதிகளுக்கும் தரகராய், உங்களிடம் பல ஏமாற்றங்களைச்செய்து, உங்கள் பாவத்தை எல்லாம் போக்கி, உங்கள் முன்னோர்களை மோட்சத்திலேயே வைத்திருக்க, நீங்கள் கொடுக்கும் தானதருமத்தால், தொழிற்சாலையும் மில்லும் இல்லாத இராமேசுவரத்தில்கள்ளுக்கடையையும்சாராயக்கடையையும் ஆயிரம் இரண்டாயிரத்திற்கு ஏலத்தில் போகும்படி செய்வார்களா? காசி, கயா முதலான இடங்களில் உங்கள் பிதுர்க்கள் பசியோடு இருப்பதாகச் சொல்லுவதைக்கேட்டு, நீங்களும் நம்பி, பண்டாக்கள்ஆளைப் பார்த்து அவருடைய தகுதியைத் தெரிந்து அதற்கேற்றபணம்கேட்பதை அப்படியேகொடுக்க, அந்தப்பணத்திற்கு நெய்யினால் செய்யப்பட்ட பூரியும் அல்வாவும், கட்டிப்பால் ஏடும்செய்து உண்டு கொழுத்துஉக்காக் குடித்துத் தின்டு தலையணையில் சாய்ந்து கொண்டு, உங்கள் பிதுர்க்களை மோட்சத்திற்கு அனுப்பிவிட்டதாகச் சொல்வதைக்கேட்டு நீங்கள் சந்தோஷப்படுகிறீர்களே! வேதம் படிக்காதவன்—ஒழுக்கம் கெட்டவன்—தவசில்லாதவன்— பொய்ச் சாட்சி சொன்னவன்—கூலிக்குப் பூஜை செய்கிறவன்—அங்கவீனன்—லாகிரிவஸ்துவை உபயோகிப்பவன்—ஆகிய இவர்களைக்கொண்டு பிதிர்கர்மங்கள்செய்விப்பவன் பாவத்தை அடைவான், இவர்களுக்குத் தானம் கொடுத்தவனுடைய உயர்ந்தநிலை கெட்டுவிடும் என்று ஸ்மிருதிகளே சொல்லுகின்றன. இவை சின்னத் தலைகளுக்குத் தெரிவதில்லையே! பக்கத்துவீட்டுக்குழந்தை பால் இல்லாமல் செத்துப்போனாலும் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால் நீங்கள் செத்துப்போகையில், ஒரு பசுமாடு யாரோ ஒருபார்ப்பானுக்குத்தானமாகக் கொடுத்து மோட்சம் அடையலாம் என்று நினைக்கிறீர்களே! மோட்சத்தை ஒருபசுமாட்டிற்குள் அடக்கிவிட்டீர்களே! பக்தி—ஒழுக்கம்—கருணை இல்லாத கோயில் குருக்களுக்கும் மடாதிபதிகளுக்கும் பணம் கொடுத்துக் காலில்விழுந்து, அவர்களை லீலாவிநோதராக்குகிறீர்களே! இதுஎந்தத் தலையின் குற்றம் என்பதையோசித்துப் பாருங்கள்.

தம்பீ! நீ சொன்னதை யெல்லாம் கேட்டேன். இப்படியே சொல்லிக்கொண்டு போனால் போதுமா? சின்னத்தலை போகவேண்டாமா? வார்த்தைகளில்முட்டாள், மடையன் என்கின்றவார்த்தைகள் கடுமையானதல்லவா? பெரியதலை சின்னத்தலையாக வேண்டியதில்லை. சின்னத்தலை பெரியதலையாகவேண்டியதுதானே! அதற்கு என்னவழி தம்பீ?

அண்ணா! ஈ. வெ. ரா. பெரியார் சொல்லுவதுதான் இதற்கு வழி. "நம்மை யெல்லாம் சின்னத் தலை என்று ஏடு எழுதின தெய்வமும் அந்த ஏடும் நமக்கு வேண்டாம். அதன்படி நாம் நடக்கவும் கூடாது. நம்மை எல்லாம்சின்னத்தலைஎன்று கற்பித்த தெய்வங்களும் இதிகாசங்களும் நமக்குத்தேவையில்லை. அதிலிருந்து ஒருநீதியும் நாம் கற்றுக் கொள்ளவேண்டாம். மனிதனுடைய சுதந்திரத்தையும், நியாயபுத்தியையும் பறித்து எடுத்துவிடுகிறமதக்கோட்பாடுகளை— நூல்களை —உருவங்களை—சட்டங்களை— மதங்களை எல்லாவற்றையும் விலக்கிவிடவேண்டும்.

உண்மை—நியாயம்— வெட்கம் முதலியவைகளைவிட்டு இச்சகம் பேசி இதம் சொல்லித் திருப்தி அடையும் கோழைகளைவிட்டுவிலகி நாமெல்லாம்ஒன்றுபட்டு, உண்மைக்குப் பரிந்துபேசும் நேர்மை உண்டானால் நம்மையெல்லாம் சின்னத்தலை என்று யாரும் சொல்லமாட்டார்கள்" என்று ஈ. வெ. ரா. பெரியார் சொல்லுகிறார். அவர் சொல்லுகிறபடி நடந்தால் எல்லோருமே பெரியதலையாகிவிடலாம். சித்திர— சங்கீதம்—சினிமா ஆகிய எந்தத் துறையிலும் நாம் சின்னத்தலை ஆக மாட்டோம்.


போரில் வெற்றி!
எனவே சமாதானகால தேவைகளிலும் வெற்றி வேண்டும்.

ஆகையால்

# குரு மருந்துகள்

இனி உங்கள்தேவைக்குக்கிடைக்கலாம்.

முக்கிய தயாரிப்புகள்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| குரு தைலம். (210-வியாதிகளுக்கு) | 1 | 8 | 0 |
| குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கு) | 0 | 5 | 0 |
| குரு களிம்பு (பத்து, படைகளுக்கு) | 0 | 14 | 0 |
| குரு ஆயுள்வேத லேகியம் | 2 | 0 | 0 |
| குரு ஆஸ்த்மா டிராப்ஸ் (இருமல்-காசங்களுக்கு) | 2 | 0 | 0 |
| குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர்களுக்கு) | 5 | 0 | 0 |
| குரு சந்தான சொர்ணம் (ஸ்திரீகள் சர்ப்பநோய்களுக்கு) | 5 | 0 | 0 |
| குரு குழந்தை செட் 7-மருந்துகள் (Children Set) (குழந்தைகள் நோய்-பாதுகாப்புக்கு) | 8 | 10 | 0 |

குரு மருந்துகள்
குடும்ப பொக்கிஷம்.

உங்கள் ஊர் மருந்து ஷாப்புகளில்கேளுங்கள். இல்லாவிட்டால்,

டாக்டர்:

ஏ. மதுரம் சன்ஸ்.,
குரு மருந்து சாலை,
திருச்சினாப்பள்ளி.


## மதிப்புரை

புதுக்கோட்டையைச் சேர்ந்த இராமச்சந்திரபுரத்திலிருந்து வெளியாகும் **'தொழிலாளர் உலகம்'** என்ற திங்கள் சஞ்சிகையின் இரண்டாவது ஆண்டு மலர் வரப்பெற்றோம். இதன் விலை ரூபா 1. சுமார் 125-பக்கங்களும் கண்கவர் அட்டையுடனும் விளங்குகிறது.

இதன்கண், தொழிலாளர்கள் துயரமும், அது நீங்குவதற்குரிய வழிகளும், தொழில்முறையை எப்படி வகுத்துக்கொள்ளவும்—செய்யவும் வேண்டுமென்பதும் பல சிறந்த கட்டுரைகளால் நன்குவிளக்கப்பட்டும், தொழிலாளர் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணிபுரிந்து வருகின்றதென்பதை இம்மலரை முகர்வோர் நன்குணர்வர்.

## கிழக்கும் மேற்கும்

*இது, காஞ்சியில்நடைபெற்ற தமிழ்த் திருநாளின் பேர்து பேச்சுப்போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற மாணவன் ஆர். கே. முகமதுகாசிம் ஆற்றிய சொற்பொழிவு.*

### கிழக்கும் மேற்கும்

கிழக்கும் மேற்கும் என்பதின் உட்கருத்து, கீழ்நாடும் மேல்நாடும் ஆகும். கீழ்நாடு என்பது ஆசியாக் கண்டமும், மேல்நாடு ஐரோப்பாவும், அமெரிக்காவும் ஆகும். எடுத்துக் காட்டுக்கு இந்தியாவையும் இங்கிலாந்தையும் எடுத்துக்கொள்வோம்.

### மதம்

இங்கிலாந்திற்கு ரோம்நகரத்தில் இருந்த கிருஸ்தவ மதப்பிரதான குருவான போப் என்பவரால்அனுப்பப்பட்ட அகஸ்டியன், கென்ட் மாகாணத்தில் இறங்கிக்கிருஸ்தவ மதத்தைப் பிரசாரம் செய்தார். கென்டையாண்டஎதல்பர்டுகிருஸ்துவ மதத்தைப்பின்பற்றினன். பின் குடிகள் பின்பற்றினர். பிறகு அம்மதம் நாடுமுழுவதும் பரவியது. இதனால் எவ்வாறு மதவிஷயத்தில் ஒரு பிரதான குருவுக்குக்கட்டுப்பட்டார்களோ, அவ்வாறே ராஜ்ய விவகாரத்திலும் ஓர் அரசனுக்குக் கட்டுப்பட்டார்கள். பிறகு அம்மதத்தில் ஏற்பட்ட பிரிவுகளை விட்பி மகாசபை தீர்த்துவைத்தது. பின் பைபிள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டதாலும்,மாட்டின் லூதரின் புரட்சியாலும், எட்டாம் ஹென்றியாலும் மதம் சீர்திருத்தி அமைக்கப்பட்டு இன்றுவரை முன்னணியில் நின்றுவருகின்றது. ஆனால் நம்நாட்டிலோ அக்காலந்தொட்டு இன்றுவரை எத்தனையோ மதம், அதனால் ஏற்பட்ட எத்தனையோ வேதங்கள், எத்தனையோ குலம், குலாச்சாரம் நிரம்பிக்கிடக்கின்றன. இதுவரையில்யாரும்எதையும் சீர்திருத்தி அமைக்கவில்லை. வாலிபர்களே! வருங்காலத்திலே வாழவேண்டியவர்கள்நாம். எனவே நல்ல அந்தஸ்துக்கு நாம் வர வேண்டுமானால் மதங்களைச் சீர்திருத்தவேண்டியது நம்கடமை. ஜாதி வேற்றுமைகளைத் தொலைப்பது நம் கடமை. ஆகையால் இத்துறையில் உழைக்கும் பெரியோருடன் வாலிபர்களாகிய நாம், இனி அறிவுடனும், அந்தஸ்துடனும் வாழவேண்டியநாம்ஒத்துழைத்துஅவர்களுக்கு ஆவன செய்யவேண்டியது நம் கடமை யன்றோ?

### தெய்வ வழிபாடு

இத்தெய்வ வழிபாடு மதத்தினால் ஏற்பட்டது. மேல்நாட்டில்கிருஸ்துவமதம்பரவியவுடனே பலதெய்வ வழிபாடு இருந்தஇடம் தெரியாமல் மறைந்தது. கல்வி வளர்ச்சிக்குரிய நிலையங்கள் உண்டாயிற்று. ஆனால் நம் நாட்டிலோ இன்றுவரை பலதெய்வ வழிபாடு நிலைத்திருந்து சண்டை சச்சரவைக் கிளப்பிவிடுகிறது. மூலக்கடவுள் மூவர், அதனால் உண்டான முப்பத்துமுக்கோடிதேவர்கள், இவைகள்யாவும் நம் தெய்வங்கள். மேல்நாட்டிலே தெய்வத்தை வணங்குவதிலே ஆண்டிக்கும்அரசனுக்கும் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் ஒரே இடம், ஒரே அந்தஸ்து. ஆனால் நம்நாட்டிலோ அவ்வாறு கிடையாது. அந்நிலையை நான் கூறவேண்டிய அவசியம்இல்லை. உங்களுக்கே தெரியும். இந்த நிலை மாறவேண்டாமா?

(7-ம் பக்கம் பார்க்க)

# இந்துஸ்தான் நகரில்

நமது அருவ நிருபர்.

திராவிடத்திலகம், தியாகராயர் திருப்பெயரால் விளங்கும், தியாகராயநகர், ஆரியப்படை எடுப்பை நடத்தும்கூட்டத்தினரின் அகமகிழ இந்துஸ்தான்நகர், என்று பெயரிடப்பட்டிருக்கிறது! ஆயிரம்பேர்களுக்குமேல் சிறைபுகச் செய்த "இந்தி," ஒருநகரைப்பெற்றிருக்கிறது; ஆனால் என்ன நகரம்? பத்து நாளில் பிய்த்து எறிந்துவிடவேண்டிய,ஓலைப்பந்தலின் வரிசை! ஆமாம்! பந்தல்மட்டுந்தானா? காந்தியர்கள் மிகக்கஷ்டப்பட்டுப்போடும், இந்தி முதலிய பலப்பல திட்டங்களும், திராவிடத்திலே தோன்றஇருக்கும் பெரும்புயலால் பிய்த்து எறியப்படத்தான்போகின்றன. அதனை நம்மைவிட, அவர்கள் நன்ருக அறிவார்கள். இந்தியைக்கட்டாயபாடமாக்கிய ஆச்சாரியார், இந்த 'நகர் விழா'வைநம்பி, மீண்டும் மந்திரியாகிக்,கட்டாய இந்தியை நுழைக்க முயலுவார் என்று இந்துஸ்தான் நகரிலே பேசிக் கொள்கின்றனர். "கருப்புச்சட்டைப் படை" காணலாம், முதல் களத்தை என்றுகளிப்பது, வெள்ளை ஆடை வேதியப்படைக்குத்தெரியாது. ஆயிரம் தமிழரை அவதிக்குள்ளாக்கிய இந்தி என்ற அடைமொழி, நமது முகங்களிலே புன்னகையை வருவிக்கும், ஆச்சாரியாருக்கோ அன்று கண்ட அல்லலை எண்ணினல்பெருமூச்சுத் தான்பிறக்கும். காந்திஜீ, ஜாஜீஜீ, என்பவர்களின் மனம் களிக்க வேண்டும் என்பதற்காக ராஜாஜி, மீண்டும் வம்பு விதைக்கத்துணிந்தால், அவதியை அமோகமாகஅறுவடையாகக் காண்பார்.

* * *

காந்தியாரின் மாலைப்பூஜை, காணக்காட்சியாகஇருக்கிறது என்று பூரித்தார் ஒரு நண்பர். உண்மையிலேயே, மயிலை, திருவல்லிக்கேணி, மாம்பலம்,ஆகிய இடங்களிலிருந்து சராஜ்மல், செல்லாராம், கம்பெனிகளின் தயவுடன், கார்ட்சிதந்தகூட்டம், காணக்காட்சிதான் — கண்களுக்கு விருந்து! கருத்துக்குக் கடுங்காற்று!! ராமநாமத்தை உச்சரித்த திருவாயர்கள், வேறுபலநாமங்களை மனதிலே பஜித்தவண்ணம் இருந்தனர். பக்தர்கள் வாழையடி வாழையாக, வாயொன்று பாட மனமொன்று நாட, கண்ணென்று தேட, இருக்கும், அன்பர்கள் தானே! நாம்யார் அவர்களைக்குறை கூற!

* * *

"சினிமாவுக்குப் போவதைவிட, இப்படிப்பட்ட பஜனைகளுக்குச் செல்வது நல்லது என்றுகாந்தியார் சொன்னரே அது உண்மை சார்!" என்ருர் ஒருநண்பர். ஆமாம் இப்படிப்பட்ட பஜனைகளுக்குப் போகிறவர்கள், சினிமாவுக்குப் போகவேண்டிய அவ்சியமே இல்லை. பூ! அங்கே என்ன இருக்கிறது!இங்கே இல்லாததா? என்ருர் ஒரு இளைஞர் —நல்ல ரசிகர்!

"காந்தியார் இங்கேவந்துபோய் 9 ஆண்டுகளாகின்றன" என்ருர் ஒருபுதுபட்டாபி — அதாவது காந்தியசரிதம் அறிந்த தோழர். "வயதாகிவிட்டது!" என்று வருந்தினர் வேருெருவர். அவருக்குமட்டுமா, அவர்போட்ட சகல திட்டங்களும், பிரச்சாரம் என்ற ஊன்றுகோலின் துணைகொண்டுதான்தள்ளாடிநடக்கின்றன. அதனை உணர்பவர் எவ்வளவுபேர்? மற்றவர்களுக்குத்தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அந்த சூக்ஷமம், நேருவுக்குத் தெரியும்.!!

அஹிம்சை, காந்தியாரின்மூச்சு, I. N. A. வுக்கு இன்று காந்திசீடர்களின் பூஜை நடக்கிறது. இதன் அர்த்தம் என்ன? அஹிம்சையின் வெற்றியா?கூசாமல்பொய்யுரைக்க முன்வருவார் தவிர, மற்றவர், வெற்றி என்று கூறுர். சுபாஷ் பாபுவின் வெற்றி காந்தியாரின் தோல்வி, அரிபுராமான்மீயப்படி. இன்று? சுபாஷ்பாபு, நேத்தாஜியாகி, மகாத்மாஜியைமிரட்டுகிருர். நேருவோ, நேத்தாஜியின் சேவையைப்பாராட்டுகிருர்!

* * *

"வயது ஏறினலும், மேனியின் மெருகைப்பாருங்க சார்!" என்று பாராட்டினர் ஒருபக்தர், "ஆமாம்! அதற்குக்காரணம் என்ன தெரியுமோ?" என்று கேட்டார்மற்றவர். "மகாத்மாவல்லவோ அவர்" என்ருர் பக்தர். இல்லை! அவர் சாப்பிடுவதுபோல, பாலும்பழமும், பக்குவமான பாதாம் எண்ணெய்ப்பூச்சும், எந்தஆத்மாவுக்குத்தந்தாலும் இந்த மேனி மினு மினுப்பு இருக்கும் என்ருர் அவர். பக்தர்முறைத்தார், அவர் சிரித்தார். சிரித்தவர், காங்கிரசார்தான், ஆனல்அவர்ஒரு டாக்டர்!

* * *

"ஜனசமுத்திரத்தைப் பாரும்!" என்று ஆனந்தமாகக்கூறினர் காங்கிரஸ் ஆராவமுதர். "ஆமாம்! ஜனசமுத்திரந்தான்!" என்று ஸ்ருதியைக்குறைத்துப் பேசினர் கம்யூனிஸ்டு நாகானந்தம். உரையாடல் ருசிகரமாகிவிட்டது.

கா: ஏன் இழுக்கிறீர்? ஜனசமுத்திரமாக இல்லையோ இது?

க: ஜனசமுத்திரமேதான்! அதாவது தாகத்துக்குப் பயன் படாத தண்ணீர்! வெறும் உப்புநீர்!!

கா: உப்புத்தான் சார்,உயிருக்கு ஆதாரம்.

க: ஆமாம் சார், ஆனல் கடல் நீராக அது இருக்குமட்டும், கரிக்கும், உப்பாகாது, தாகத்துக்கும் நீர் ஆகாது.

கா: லெனின் சொன்னராக்கும்!

க: இல்லை, இல்லை, உம்ம மனு சொன்னர்!

கா: இந்தப் பொது உடைமைக்காரானே, பேசறதுஇப்படித்தான் இருக்கு......................

க: ஏன் விழுங்குகிறீர், சுனுமானுக்காரா பேசறது போலவே இருக்கு! அதுதானே நீர் சொல்ல விரும்புவதும்.

கா: ஆமான்னுதான் வைச்சிக்கோ. அதுபோகட்டும், இந்தச் சமுத்திரம் பயனில்லையோ?

க: உண்டு!இந்தச்சக்தியைக்கொண்டு,பயன் காணவேண்டும், கடலிலே கலம் செலுத்தினல்தானே பலன் கிடைக்கும். அந்தக்கலம், காரல்மார்க்சால்கூறப்பட்டு லெனினல் கட்டப்பட்டு, சோவியத்திலே பலனுள்ள காரியத்துக்குஉபயோகப்பட்டது.இங்கு,கலம்கட்ட வேண்டிய கரங்களிலேதான் காந்தியார்கைராட்டையைக்கொடுத்துவிட்டாரே!

கா: ஓய்! இது காந்திக் கடல்! இதிலேகாரல்மார்க்ஸ்கப்பலைஓட்ட அனுமதிக்கமாட்டோம்.

க: அதுதான் தெரிகிறதே! இங்கே மனுமரக்கலம்தான் போக முடியும். சுபாஷ்போசின் முயற்சியையேஓட்டைப்படகு என்றுகூறிவிட்டீர்கள், அவர்நேத்தாஜி ஆகு முன்பு.எங்கள்ஓடம்,செல்லஎப்படி அனுமதிகிடைக்கும்?

கா: சொல்லுக்குச் சொல், மல்லுக்கு நிற்கிறீர். உம்மோடு பேசுவதைவிட, உரக்க ராமநாம பஜனை செய்யலாம்.

* * *

[மற்ருேர் பக்கத்தில்]

கோமளம்: வசந்தா! காந்தி மகாத்மாவை தரிசிக்கும்போது, நேக்கு எப்படி இருக்கு தெரியுமோ?

வசந்தா: எப்படி இருக்கு?

கோ: ஒரே ஆவேசமா இருக்கு.

வ: ஆமாம்! நீ கம்யூனிஸ்டு கட்சியிலே சேர்ந்திருக்கேன்னுசொன்னயே?

கோ: இருந்தேன்டி,ஆன,மகாத்மாவாட்டம் அங்கேயார்இருக்கா? எல்லாம், அரைநிஜார் மாட்டிண்டு என்னமோ அலையரு? இங்கேபாருடி, எவ்வளவு கூட்டம்!

வ; அப்படின்ன, நீ கம்யூனிஸ்டு கட்சியைவிட்டு விடப்போறயா?

கோ: எங்க அண்ணகூடவிட்டு விட்டார். இங்கே அவர் வாலண்டியரா இருக்கார் தெரியுமோ?

வ: பாவம்! சீனு, என்ன பண்ணுவான்? இப்ப நீ கட்சிமாறிவிட்டயே. அவன்கதி என்ன...........?

கோ: போடி! அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அவர் இஷ்டம் கம்யூனிஸ்டா இருக்கார்.

வ: உங்கவீடே ஒருசட்ட சபைதான்னு சொல்லு. உங்க அண்ணவும் நீயும் காங்கிரஸ்,சரிதான?உங்க அப்பா, இந்துமகாசபை, உன்ஆத்துக்காரரா வரப்போறவர் கம்யூனிஸ்டு. அவர் தம்பீ ராயிஸ்டு........

கோ: என்தங்கை இருக்காளே, அவ, I. N. A. டி. அதாவது அவ, காப்டன் லட்சுமிபோல ஆகணுமாம்! அதுதான்அவஆசை. (சிரிப்பு)

கலாரசிகர் ஒருவர்:—

ஆஹா! அந்தச்சிரிப்பு,வீணையைத் தோற்கடித்து விட்டது! நடை, அபூர்வமான நடன பாவத்தோடு இருக்கிறது. இதனைப்பற்றிக்கம்பர் ஓரிடத்தில் எவ்வளவு அழகாக வர்ணிக்கிருர் தெரியுமோ?

சினிமா ரசிகர்:—

அந்தப்பெண்ணிலே ஒருவளைப் பார்த்தா அசல் தேவிகாராணிபோலவே இருக்கா! நல்ல முகவெட்டு.

(கலாரசிகர், கம்பரைக்கைநழுவ விடநேரிடுகிறது.)

* * *

வேருேர்புறம் ரங்காச்சாரி, அனந்தாச்சாரி எனும் இருவைதீகர்கள்

ரங்: ஓய்! உம்ம வேதம்வேதாந்தம், பாகவதம், இராமாயணுதிகளெல்லாம், என்ன செய்யும் இவ்விடம். பார்த்தீரா, கூட்டத்தை. உம்ம சீதாகலியாணத்துக்கு ஒரு நூறுபேர் சேருவா, அதிலே பாதிபேர் தூங்குவா, கால்வாசிப்பேர், இராவணனைக்கண்டுகொண்டு இருப்பா! இங்கேபாரும்.

அன: போதும் பிதற்றுதே ஓய்! நேக்கும், அவருக்கு இருப்பது போல ஒருபத்துபத்திரிகை இருக்கட்டும், அப்பபாரும்நாமும்மகாத்மாதான்.

ரங்: இந்தியாபூராவும் கியாதிஓய் மகாத்மாவுக்கு.

அன: லோகம்பூராவும் இருக்கு, யார் இல்லென்ன? அதைஅவர் எப்படி அடைஞ்சாருன்னு சொல்லும்?

ரங்: அவர் மகாத்மாவன்னே? அதனுலே இந்தக்கியாதி.

அன: பாரத்வர்ஷத்திலேஇதற்கு முன்னலேமகாத்மாக்களேஜெனிக்கலையோ? ஏன் ஓய்! மகாத்மா கபீர்தாசர், துளசிதாசர், இராமதாசர், நம்ம இராமானுஜர், யார் ஓய், மகாத்மாஇல்லை! அவாகாலத்திலே இதுபோலப் பத்திரிகைகள் இருந்ததில்லை. இவர் காலத்திலே, பத்திரிகைபலம் இருக்கு, கியாதி பரவறது. இவர் கியாதிக்காக ஆச்சரியப்படுகிறீரே, ஓய் உம்மை ஒன்றுகேட்கிறேன். இப்ப, அமிர்தாஞ்சனம் என்றபெயர் தெரியாதவா உண்டோ?

ரங்: இல்லே.

அன: எப்படி அதற்குக் கியாதி வந்தது?

ரங்: விளம்பரம் செய்தா! பணம் கொடுத்து! அதுபோல மகாத்மா செய்ருரோ?

அன்: அதைப்போலச் செய்யறதுன்னகூட சிரமம் ஓய்! இவருக்கு அந்தச்சிரமம் இல்லே, விளம்பரம், சுலபமா, செலவில்லாமே அமோகமா கிடைக்கிறது, அதனலே, கியாதி வளர்ந்துண்டு வர்ரது, இதிலேஆச்சரியம் என்னஇருக்கு?

ர: வயற்றெரிச்சல் ஓய், உமக்கு!

அ: உம்மோடுயார் பேசுவா? கொஞ்சம் பேசாமேஇரும், முனியாண்டிச்செட்டி வர்ரான் அவனிடம் கொஞ்சம் காரியமிருக்கு.

ர: கறக்கப்போறீரோ?

அ: பேசாமே இரும் ஓய்! இந்தக்காலத்திலே, உதைக்கிற பசுக்கள்தான்ஊரிலே அதிகமா இருக்கு.

* * *

ஆச்சாரியார் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரும் காமராஜர் கட்சியைச் சேர்ந்த ஒருவரும், வருகின்றனர்.

கா. க: மகாத்மாவுக்கு இருக்கும் செல்வாக்கு அபாரம்.

(6-ம் பக்கம் பார்க்க)

## திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம்

திராவிடர்கழக, நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்20—1—46ல் திருச்சியில்நடைபெற்றது. திராவிடர் கழகத்தலைவர் பெரியார் அவர்களும்,திராவிடர்கழக நிர்வாகத்தலைவர் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்களும், மற்றும்நிர்வாகக்கமிட்டியினர் பலரும் வந்திருந்தனர். நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்களாக தோழியர்மணிஅம்மையாரும், திருச்சி தோழர் சின்னத்தம்பிஅம்பலகாரும்சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 'விடுதலை' தினசரியைவிரைவில்துவக்குவதென்றும், கட்சிநிதி வசூல்வேலையைவிரைவில்துவக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்துக்கு, பாண்டிநாட்டிலே, சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தபெரியார்வந்து கலந்துகொண்டு, உடனே,"விடுதலை" சம்பந்தமான ஏற்பாடுகளைக்கவனிக்கச்சென்னை வந்துசேர்ந்தார்.

பித்தேறி மேல்கீழ்என்று பேசுவோர் உறவு வேண்டாம்

கருவூர்த் தாலுக்கா

**4-வது திராவிடர் கழக மாநாடு**

3—2—46ல்

**தவுட்டுப்பாளையம் கிராமத்தில்**

தோழர். பி. சண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.


# திராவிட நாடு

காஞ்சி 27--1—46 ஞாயிறு


## பதி-பக்தி

[ புதிய நாடகம் ]

✶

பழைய பதிபக்தி நாடகம் பலரும் அறிந்ததே. குடிகாரக் கணவன், குணவதியான மனைவி; அவன் கூத்திவீட்டில், இவள்குடும்பபாரத்தைத் தாங்கிக்கொண்டு! அவன் இவளை நையப்புடைக்கிறான், இவளோ அவனைப்பூஜை செய்கிறாள், ஏன்? பதிபக்தி! உத்தமியின் உள்ளம் அவ்விதம் இருக்குமாம்—இருக்கவேண்டுமாம்! இந்தத்தத்துவத்தைநிலைநாட்டஎவ்வளவோபாட்டு, கூத்து, நாட்டில். பழையபதிபக்தி, குடும்ப வாழ்க்கையைப்பற்றியது. இதுபுதிது, பொதுவாழ்க்கை சம்பந்தமானது.

சிலநாட்களாகக்கம்யூனிஸ்டுகட்சிக்கும் காங்கிரசுக்கும், மனக்கசப்பு. 'தலாக்' (விவாக விடுதலை,) ஆகிவிடவில்லை என்ற போதிலும், கணவன்கழுத்தைப்பிடித்துநெட்டி வெளியே தள்ளிவிட்டதால், அழுத கண்களுடன், பெண், தாய் வீட்டுத்தாழ்வாரத்திலே வந்து நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை ஏற்படுவதற்குப்பன்னெடு நாட்களுக்கு முன்பே, 'புகைச்சல்' இருந்தது. கண்கசக்குவது ஏனம்மா? என்று கேட்டால், கணவனிடம் அடிபட்ட காரிகை, அடுப்பூதும்போது கண்ணிலே கரிபட்டது என்றுபொய்கூறிப், பதிபக்தியைக் காட்டும் வழக்கம்போலவே, அடிக்கடி காங்கிரசுக்கும்கம்யூனிஸ்டு கட்சிக்கும் கொள்கையிலேமோதுதல் ஏற்பட்டபோது, கம்யூனிஸ்டு கட்சி, பதி-பக்தியைக்காட்டமுயற்சித்து வந்தது. இவ்வளவுபிரியமான 'பத்தினி' கிடைத்தும், அந்தக்கணவன், என்ன செய்கிறான்? பத்தினிகளின் புருஷர் வழக்கமாகஎதைச் செய்தார் என்று கதை படிக்கிறோம்! கண்ணகியின் கண்ணீருக்கும், மாதவி தெளித்த பன்னீருக்கும் அன்று நடந்த போட்டி, முடிவடையவில்லையே! இன்று மன்றோ நடக்கிறது. குடும்ப விஷயத்திலே இத்தகைய நிலைமை கோரவிளைவுகளைத்தருகிறது; பொதுவாழ்க்கைத் துறையிலேயோ என்றால், விளைவு விபரீதமாக மட்டுமல்ல, நாட்டுமக்களின் மனதிலேயே நாசஎண்ணங்களைத்தூண்டுகின்றன. உலகெலாம், சர்ச்சில்போன்ற ஒருசில ஏகாதிபத்ய வெறியேறியவர்கள் தவிர, மற்றயாரும், இகழப்படும் பொதுஉடைமைக் கொள்கையை, காங்கிரஸ்—கம்யூனிஸ்டு தகராறின் பலனாக, எவ்வளவு மட்டரகங்களெல்லாம் கேலிசெய்கின்றன, என்பதை எண்ணும்போது நெஞ்சம் நோகிறது. "அவன் சட்டைப்பையில் இருந்து ஒருரூபாய் யாரோ களவாடிவிட்டனர்" என்று எழுத வேண்டிய சமயத்தில், களவாடிவிட்டனர் என்ற பதத்துக்குப் பதிலாக, யாரோ, அபேதவாதம் செய்துவிட்டனர்என்றுதேசீயத்தினமணி, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே எழுதிற்று. எட்டி உதைக்கும் காலைத்தொட்டுக் கும்பிடும் பத்தினிக் கோலத்திலே பொதுஉடைமைக் கட்சியினர் இருந்துவந்தனர்—நாம் அவ்வப்பொழுதுகூறிவந்த அறிவுரைகளை அலட்சியப்படுத்தி. இன்று என்ன நடந்தது?

பம்பாயிலே, சுபாஷ்தினம் கொண்டாடினர். சுபாஷ்பாபு, காந்தீயக்காங்கிரசை எதிர்த்தவர்; கண்காணாஇடம் சென்று, காந்தியாரின் ஜீவாதாரக்கொள்கையான அஹிம்சையை லட்சியம் செய்யமறுத்து, ஒருவிடுதலைப்படையைத் திரட்டியவர். அந்தப்படையில் இன, மத, குல பேதத்தை மறந்து பலர்சேர்ந்தனர். அத்தகைய ஒற்றுமையை நடைமுறையில் செய்து காட்டிய ஒப்பில்லாத்தலைவருக்கு விழா! அதிலேநடந்தது என்ன? போலீசுக்கும்ஊர்வலக்காரருக்கும்இடையே தொல்லைகள்—இது இயற்கை, விடுதலை ஆர்வமும் அதிகார முறையும் எங்கும், ஒன்றை ஒன்று தகர்க்கத்தான் முயலும். ஆனால், பம்பாய் ஊர்வலத்தின் விளைவு அதுதானா? இல்லை. வெள்ளையனை ஓட்டுவதற்கு ஒத்திகை நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் காங்கிரசார், எங்கே பாய்ந்தனர்? பம்பாய், கம்யூனிஸ்டு கட்சி காரியாலயத்தின்மீது!

உலகோர் கண்டு ஆச்சரியப்படக்கூடிய புரட்சியைநடத்திக்காட்டிப்புதுஉலகைச் சிருஷ்டித்த மாவீரன், லெனின். அந்தவீரனின்விழாக் கொண்டாடப்பட்ட அதேகிழமையில், பம்பாய் கம்யூனிஸ்டு கட்சிக் காரியாலயத்துக்குள் நுழைந்து, அச்சுப்பொறிகளை நொறுக்கி, ஆட்களை அடித்து, கிடைத்த புத்தகங்களையெல்லாம் கொளுத்தி, பொது உடைமையைப் பழித்தும் இழித்தும் பெருங்கூச்சலிட்டு, பொது உடைமைக் கட்சிக்காரியாலய டெலிபோன் கம்பிகளை அறுத்துச் சுமார் 1 இலட்சரூபாய்க்குச்சேதம் இருக்கும் என்று மதிப்பிடக்கூடியவிதத்திலே, 'மகத்தான காரியத்தைச்செய்திருக்கிறார்கள். யார்? ஜாரின் கையாட்களா? அவர்கள் செய்தால், வெட்கமும் துக்கமும் தோன்றாதே, பெருமை அடையலாம், அவர்கள் பித்தர்கள், எதைச் செய்கிறோம் என்பது அறியாமல் செய்கிறார்கள் என்று எண்ணிட இடமுண்டு. செய்தவர்கள், அஹிம்சாவாதிகள், நாட்டுவிடுதலைப்படையினர். எந்த அறிவாளியும், படித்து, கண்களிலே கனலும் புனலும் ஒருசேரக்கிளம்பக் காண்பர், பொது உடைமை சம்பந்தமானஏடுகளில்! அவைகளைத், தீயிலிட்டனராம்தேசபக்தர்கள்! அவைகளைத் தீயிலிட்டுவிட்டு, மனுபராசரர் மாந்தாதா ஆகியோரின் ஏடுகளைக்கொண்டு, நாட்டைத் திருத்துபவர்கள்தானே அவர்கள்!! "கண்ணன் காட்டிய வழி" இருக்க, காரல்மார்க்ஸ் அவர்களுக்கு ஏன்?

பொதுவாழ்க்கையிலேயும், கட்சி நடவடிக்கைகளிலேயும், நாட்டிலே கலவரங்களும், வீணாரவாரங்களும், நாகரீகமும் பண்பும் படைத்தமக்களை நடுங்கவைக்குமளவு நடைபெற்று வருவதை நாமறிவோம். இந்தநிலைமை, வளர்ந்து வருகிறதேயன்றி, குறைந்து படுவதாகவும் இல்லை. ஆகவே நாம் கம்யூனிஸ்டு கட்சியினர்மீது காங்கிரசார் சீறிப் போரிடுவதைச் சிரிப்புக்கிடமான காரியமாகக்கொண்டு இதனைஎழுதவில்லை, சிந்தனைக்குப் பலரும்வேலை தரவேண்டும் என்பதற்கே இதனை எழுதுகிறோம்.

காங்கிரஸ், இன்று எந்தநிலைமையில் இருக்கிறது என்பதை நன்கு அறிந்தவர்கள், இச் செயல்களைக் கண்டு ஆச்சரியப்படமாட்டார்கள். கிராமத்து மிராசுதாரன், பண்ணைக் கூலியை மரத்திலே கட்டி வைத்து அடிக்கிறான்—இல்லை—அடிக்கமற்றொரு கூலியை ஏவுகிறான். நியாயமல்ல! ஆனால் நடக்கிறது! நடைபெறுகிறது! ஆனால்நியாயமா என்று யாரும் கேட்க முடியாது. மிராசுதாரரால், அந்தத் 'தர்பார்' நடத்தமுடியும்; அதற்கேற்ற அந்தஸ்து ஆள் அம்பு இருக்கிறது, அவர் ஆயிரம்பேருக்கு "ஐயா" சர்க்காருக்கு அவர்ஒரு "ராவ்சாகிபு." அடிபட்டவன்யார்? ஆறணாக் கூலிக்கு ஆலாய்ப்பறக்கும் முனியன்தானே!! பணபலம், பத்திரிகை பலம், படைத்த காங்கிரஸ், இந்தியாவின் ஏகபோக மிராசுதாரன் நிலைமையில் இருக்கிறது. எனவே அதனிடம் மிலாறுகொண்டு முனியனையும் கந்தனையும் அடிக்க ஆட்கள் ஏராளம், ஆகவே அக்காரியம் தங்குதடையின்றிநடைபெறுகிறது 'மிலாறு' நமது கட்சியின்மீதுபாய்வதுண்டு—பாய்ந்தது. சென்ற கிழமை, காலமெல்லாம் கஷ்டத்தைப் பார்க்காமல், கொள்கைக்காக அலைந்துதிரியும் ஆற்றல்மிக்க நமதுபெரியார்மீது பாய்ந்தது. சின்னாளப்பட்டி என்ற ஊரிலே, அவர்மீது வீசப்பட்டகல்உண்டாக்கியவடு, அவர் கரத்தில்இருக்கிறது. நாம் அவ்வித நிலைமைகளின்போது, வருத்தம் கொள்வதுமில்லை, ஆச்சரியப்படுவதுமில்லை, ஊரெல்லாம்காங்கிரசின் பிரச்சாரபலத்தால் எவை எவைகளைச் சரிஎன்றுநம்பிக்கொண்டுள்ளனவோ, அந்தத்திட்டங்கள் தவறு என்று நாம் கூறுகிறோம், எனவே, 'குட்டு'வெளிப்படுகிறதே என்ற கோபத்தால், கல்வீசுகிறார்கள் என்று எண்ணி, கல்வீசிய நேரம்போக மற்றநேரத்தில் நமது சொல்லைக்கேட்டார்களல்லவா, அதுபோதும் என்று திருப்தியும் அடைகிறோம். ஆனால் கம்யூனிஸ்டுகளின் விஷயம் அப்படியில்லையே! அவர்கள் படும் கஷ்டம், "பதிபக்தி"யின்விளைவு!! இவ்வளவு 'இழிவாக' நடத்தப்பட்டும், கம்யூனிஸ்டுக்கட்சி, அம்மு சுவாமிநாதனுக்கும் அன்பர் சடகோபாச்சாரியாருக்கும் "ஓட்" திரட்டிக்கொடுத்தது! அடுத்ததேர்தலிலும், "சில இடங்களிலே காங்கிரஸ் அபேட்சகருக்குப் போட்டிக்குஆள்நிறுத்துவோம், சில இடங்களிலே நிறுத்தமாட்டோம் எங்கள் ஆள் இல்லாத இடத்திலே காங்கிரசுக்குத்தான் "ஓட்" தரும்படிமக்களுக்குக் கூறுவோம்" என்றல்லவா, 'பத்தினி' பதிகம்பாடக் கேட்கிறோம். பரிதாபம் நிறைந்தஇந்தப் புதியபதிபக்தி நாடகத்தின் இறுதிக்கட்டத்தைக்காண நாம்ஆவலாகக் காத்துக்கொண்டிருக்கிறோம்!!

---

**வேலூர் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம்**

1-2-46 வெள்ளியன்றுநடைபெறும்

பெரியார் ஈ. வெ. இராமசாமி

அவர்கள் சொற்பொழி வாற்றுவார்.

### லெனின் தினம்

21-1-46ந்தேதி, காஞ்சிபுரம்திராவிடர்கழகத்தார், லெனின்தினத்தைச் சிறப்பாகக்கொண்டாடினர். தோழர் காந்திமதிநாதன் எம். ஏ. தலைமை வகித்தார். தேநீர்விருந்துக்குப்பிறகு, லெனின் ஆற்றிய அருந்தொண்டுகள் பற்றியும், திராவிடத்துக்குஅத்தகைய தீரம் கொள்கைகள் எவ்வகையில் அமைதல் வேண்டும்என்பது பற்றியும் தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை. வெங்கட்ராமன், ஜனாப்அப்துல்காதர், ஏ. சுப்பிரமணியம், சிகாமணி, டி. பி, எஸ். பொன்னப்பா, கே. எஸ். முனுசாமி ஆகியோர்பேசினர், தோழர் சி. டி. நடராஜன் எம்.ஏ. பி.எல். நன்றி கூறினர்.

### குட்டு வெளிப்பட்டது

●

"இந்திதெரியாதவர்கள் எத்தனை பேர்?" என்று கேட்டார் காந்தியார், இந்துஸ்தானிநகரில். ஒருவரும் கைதூக்கவில்லை. அப்படி என்றால் அனைவரும் இந்தி தெரிந்தவர்கள் என்றுபொருளா? இல்லை! காந்தியார் அந்தக் கேள்வியைக் கேட்டதே இந்திமொழியில்! அதுயாருக்கும் தெரியாது, எனவே என்ன கேட்கிறார்என்பது தெரியாமல்அனைவரும் சும்மா இருந்தனர். பிறகு அவருடைய கேள்வி தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது. அப்போது தான் பெருவாரியானவர்கள் கைகளைஉயர்த்தினராம்.

'வெட்கப்படவேண்டாம்'என்று ஆறுதல் கூறினாராம் காந்தியார், பிறகு ஆச்சார்யார் விஷயத்தைச் சந்திக்குஇழுத்துவிட்டாராம். இந்தியிலேபேசினால் உங்களுக்குப்புரியாததிலே என்னஆச்சரியம் இருக்கிறது! ஆச்சாரியாருக்கேஇந்தியிலே பேசினால்புரியவில்லை. ஆகவேமுதல் குற்றவாளிஅவர். இங்கேதமிழ்பேசுகிறார், வெளி மாகாணங்களிலே இங்கிலீஷில் பேசுகிறார், இந்தியில் பேசத்தெரியவில்லை' என்றார்காந்தியார்.

ஆச்சாரியாரின்'குட்டு'உடைபட்டதுகூட அல்ல வேடிக்கை; இந்தியைக்கட்டாய பாடமாக்கும் அளவுஅந்தமொழியிடம் அக்கரைகொண்டு, பல ஆண்டுகள்படித்து, வடநாட்டுத் தொடர்புவைத்துக்கொண்டு, அடிக்கடிவடநாடுபோய்வருபவரும், காந்தியாரின்சம்பந்தியாகிவிட்டவருமான ஆச்சாரியாராலேயே இவ்வளவுபழகியபிறகும், இந்தியிலேபேசமுடியவில்லை, பிறர்பேசினால்புரிந்துகொள்ளமுடியவில்லைஎன்றால், மற்றவர் கதை என்னாகும்? இதிலிருந்து இந்தியின்குட்டல்லவா வெளிப்படுகிறது. பெண்கொடுத்தவரே இந்தி பேசாமலேயேவடநாட்டுக்குப் போவதும்வருவதுமாகஇருக்கமுடிகிறதுஎன்றால், வாழ்விலே ஒருநாளோ இருநாளோ போய்வருவோமாவடநாட்டுக்கு என்பதேசந்தேகமாகஇருக்கும் நிலையிலுள்ள திராவிடமக்களுக்கு இந்திஎதற்கு?


## அறிவிப்பு

**வளவனூர் பஞ்சாயத்து போர்டு**

**(தென் ஆற்காடு ஜில்லா)**

—●—

வளவனூர் பஞ்சாயத்துபோர்டு எல்லையில் பிரதி திங்கட் கிழமையும் நடைபெறும்மாட்டுச்சந்தையில் விவசாயிகள் தங்கள்தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள இயலாததாலும், பலர் ஷை மாட்டுசந்தையைத் தொடர்ந்து சிலநாட்களுக்குக்கூட்ட விரும்பியபடியாலும் 1—2—46 தேதி முதல் ஒரு மாதகாலத்திற்கு தொடர்ச்சியாய் ஸ்பெஷல் மாட்டுச் சந்தை ஒன்றுகூட்ட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொதுஜனங்களும், விவசாயிகளும், மாட்டு வியாபாரிகளும் இந்தச்சந்தர்ப்பத்தைத் தக்கபடி பயன்படுத்திக்கொள்ளக் கோரப்படுகிறார்கள்.

வளவனூர்,
19-1-1946.

பி. ராஜகோபால் பிள்ளை,
எக்ஸிகூடிவ் ஆபீசர்.

# படேலுக்குப் பணாபிஷேகம்!

# பாட்டாளிக்கு இரத்தாபிஷேகம்!!

:(o):

## தர்மப்பிரபுக்கள் நடத்தும் தர்பார்.

:(o):

ஆலை அரசர்கள், சுரங்கச்சீமான்கள், சுகவாசிகள், ஆகியோரின் பெட்டிகளிலே, தூங்கிக்கிடந்த "நோட்டுகள்" வெளிக்கிளம்புகின்றன. அவைகளைஎடுத்துக்கொண்டு, வேட்டை ஆடுபவர்போல ஓடுகிறார்கள் வேகமாக பாங்கிகளுக்கு. அவஸ்தைதான் பாபம்! யார் குவிக்கச்சொன்னார்கள் பணத்தை இப்படி. போகட்டும் அது அவர்கள் விஷயம், நாம் பார்த்ததுமில்லை பெரியநோட்டுகளை. இவ்விதமானதும் வேறு பலவிதமானதுமான, எவ்வளவோ அவஸ்தைநேரிட்டாலும், தர்மப்பிரபுக்கள், தமது "பக்தியைக்" காட்டவும் தவறுவதில்லை, "தர்பார்" ஒழுங்காகநடத்திவரவும் தயங்குவதில்லை. இந்தத்திங்களின் துவக்கத்திலே, ஆமதாபாத் ஆலை முதலாளிகள், அகமகிழ்ச்சியுடன், சர்தார் படேலுக்கு ஐந்து இலட்ச ரூபாய் அன்பளிப்பு அளித்தனர்; காங்கிரசுக்கு அல்ல, சர்தாருக்கு! அவருடைய தேசசேவையைப்பாராட்ட! தேசசேவை, ஐந்து இலட்சத்தைவாங்கித்தந்தசெய்திகேட்டு, எத்தனையோ தோழர்களுக்கு,தேசசேவையில் ஆர்வம், பொங்குமல்லவா!

இந்தப்பெருநிதி சர்தாருக்குத் தரப்பட்டது ஆச்சரியம் இல்லை. கோயில்பூஜாரிகளுக்குத்தானே, தேங்காயும் மாலையும்உண்டு. செல்வவான்களைச் சிறுமைப் படுத்தாதீர், அவர்களே, தர்மகர்த்தாக்கள், என்று போதிக்கும் சர்தாருக்கு, தர்மப்பிரபுக்கள் தூபதீபநைவேத்தியம் செய்யாமல் இருக்க முடியுமா? அவருக்கு ஐந்தல்ல, பத்து இலட்சமும் தரலாம் — தருவர்—தரட்டும்—ஆனால் சர்தாருக்கு இந்தச்சமயமாகப் பார்த்து இவ்வளவுபெரிய தொகையை, ஏன் ஆலை முதலாளிகள் தந்தனர், என்றுஎண்ணும்போதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

பார்லிமெண்டரி தூதுக்கோஷ்டியினருக்கு, காங்கிரசையும்அதன் தலைவர்களையும் முதலாளிமார்கள் எவ்வளவு ஆதரிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட,இந்தப்பண முடிப்பு பயன்பட்டிருக்கும். இவ்வளவு, கூட்டுறவுபலம் இருக்கிறது என்பதைக்காட்டவே இந்தப்பண முடிப்பு அளிக்கப் பட்டிருக்கக் கூடும். அவர்கள்என்ன, யூகமில்லாதவர்களா, அசகாயசூரர்களல்லவா!

ஆனால், கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டகதைபோல, ஆலைக்காரரின் அபிலாஷையையும் தேசபக்தியையும் காட்டுவதற்கு என்றுஎண்ணிச்செய்யப்பட்ட இக்காரியம், பார்லிமெண்டரி தூதுக்கோஷ்டியினருக்கு, காங்கிரஸ், முதலாளித்வத்தின் கையாள்என்ற எண்ணத்தையும், ஜெர்மனியிலே, இருப்பரசன் தைசனின்பணமும் ஹிட்லரின் பலமும் திரண்டே பயங்கர நாஜிசமாக உருவெடுத்தது, அதுபோன்றே இங்கு காந்தீயமும் — முதலாளித்துவமும் திரண்டு ஒரு உருவாகிறது என்ற எண்ணத்தையும் உண்டாக்கி இருக்கக்கூடும். சிந்தனைக்குப்பார்லிமெண்டரி தூதுக்கோஷ்டியினர் வேலைதந்தால், இத்தமுடிவுக்கேவருவர்.

படேலுக்கு இங்ஙனம்பண அபிஷேகம் செய்யும் தர்மப்பிரபுக்கள், தம்மைக் கோடீஸ்வரர் ஆக்க உழைக்கும் பாட்டாளி மக்களுக்குத்தருவது என்ன? "இரத்த அபிஷேகம்!" கோலார் முதல் குவாலியர்வரை, தொழிலாளர்களின்குமுறல். கோலார் சுரங்கத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்—நாகபுரி வேலைநிறுத்தம், தடியடி, துப்பாக்கிப்பிரயோகம்,கல்கத்தாவில் வேலைநிறுத்தம், இரயில்வேயில்,348,000 தொழிலாளருக்கு, வேலைபோய்விடும் என்ற நெருக்கடியான நிலைமை, என்றஇந்த நிலைமையிலே தான், தொழிலாளரின் வாழ்வு இருக்கிறது. தமதுபிரதம சீடராம் பிர்லா, நடத்தும் ஆலையிலே,தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டும், காந்தியார், கண்டிக்கவில்லை. இத்தகையதொல்லையைத் தொழிலாளருக்குத் தரும் முதலாளிகளிடம்கொஞ்சிக்குலவும் காங்கிரசை, கொஞ்சமாவது சமதர்மநோக்குடையவர்கள்,எப்படிஏழைகளை ஈடேற்றும்அமைப்பு என்று நம்பமுடியும். தொழிலாளருக்கு இரத்த அபிஷேகம் செய்துவிட்டு, படேலுக்குப்பணாபிஷேகம் செய்தால், பரிகாரமாகுமா?

---

# திறந்த மடல்

—●—

சர்தார் வல்லபாய் படேல்,
ஆமதாபாத்.

**பாஸிஸ்ட் தரகரே!**

தாங்கள் இம்மாதம் 15ந்தேதி ஆமதாபாத் கூட்டமொன்றில் பேசுகையில்,இந்திய சுயராஜ்யத்திற்கு முட்டுக்கட்டையாயிருப்பது தீண்டாமை என்று கூறினீர்கள், மிகவும் பொருத்தமே.

அடுத்தபடியாக, இத்தீண்டாமையை ஒழிக்க, 200 ஆண்டுகள் ஆட்சிபுரியும் ஆங்கிலேயர்களால் முடியவில்லை காங்கிரஸ் பதவி யேற்றதும் உடனே இதை ஒழித்துவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இந்தப்பேச்சில் சிறிதாவது நேர்மையோ அல்லது நியாயமோ இருக்கின்றதா என்று பார்த்தால் அதுதான் பூஜ்யமாகயிருக்கிறது.

இந்திய நாட்டிலுள்ள தீண்டாமை 200 ஆண்டுகளுக்கு முன்னால் எவ்விதம் இருந்தது என்பதை இந்தியநாட்டுச்சரித்திரங்களே நிரூபித்துவிடும். நான் ஆங்கிலேய அரசாட்சிக்கு வக்காலத்து வாங்க வரவில்லை. அது தங்களைப் போன்ற பாஸிஸ்ட் மனப்பான்மை படைத்தவர்களின் வேலை என்பதையும் காங்கிரஸ்காரர்களே அறிவர்.

இந்நாட்டில் தீண்டாமையை ஆங்கிலேயர் ஒழிக்க முன்வரவில்லை யென்றே வைத்துக்கொள்வோம்.ஆனால் 60ஆண்டுகளாக வேலைசெய்து வரும் காங்கிரஸ் தான் அதைச்சிறிதாவது ஒழிக்கச்செய்ததா? செய்து வருகின்றதா? செய்துவர முடியுமா? என்ற கேள்விகளை யான் கேட்க விரும்புகிறேன்.

காங்கிரஸ் தீண்டாமையை ஒழிப்பது உண்மையாயிருப்பின் பறையர் என்பதற்குப்பதிலாக ஹரிஜன் என்ற பட்டத்தை அந்தச் சமுகத்தின்மீது கட்டாயமாகத்திணித்து வருவது வெட்கக்கேடல்லவா? இதுதங்களுக்கு நியாயம் என்று தோன்றுகிறதா? ஹரிஜன் என்ற சொல்லும் அவர்களின் தாழ்நிலையைத்தானே எடுத்துக்காட்டுகிறது.

ஹரிஜன் என்ற பட்டம் எங்களுக்கு வேண்டாம் என்று தாழ்த்தப்பட்ட சமுகம் எடுத்துக்கூறியும், கேளாது கட்டுப்பாடாக அச்சமுகத்தினரை ஹரிஜன் என்ற மற்றொரு பெயரால் அழைத்து வரும் காங்கிரஸ் தீண்டாமையை ஒழிக்கும் என்று கூறுகின்றீரே, கொஞ்சமேனும் கூச்சமில்லாது.

அதற்குமுன்னால் ஆரியர் வருகையால் தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி கற்கக்கூடாது; தெருவில் நடக்கக்கூடாது. அது சாஸ்திர விரோதம் என்று பூணூல் சட்டம் செய்யப்பட்டிருந்ததே அவைகள் தகர்த்தெறியப்பட்டன. இன்னும் கூறவேண்டுமானால் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மையான விடுதலைக்கு முட்டுக்கட்டையாயிருப்பது காங்கிரசின் வைதிகக் கொள்கையே தவிர வேறில்லை.

அந்த வைதிகக்கொள்கைகளுக்குத் தீமூட்டவே அறிஞர் அம்பேத்கார் இன்று போர் தொடுத்து வருகிறார். அவரையும் தங்கள் சொற்பொழிவில் கண்டவாறு வசை பாடியிருக்கின்றீர்கள். வாதத்தில் தோற்றவனே வசைபாடவிரும்புவான்.

பாஸிஸ்ட் பதவிப்பித்தராக விளங்கும் தங்கள் கோஷ்டியினருக்கு இன்று பதவியே பெரிதாக இருக்கலாம். ஆனால் அறிஞர் அம்பேத்கார் தன்மானத்தைத் தான் பெரிதென்று கருதித்தொண்டாற்றுபவர். எனவே தாங்கள் என்னதான் உண்மையைத்திருத்திப்பொய்கூறமுயன்றாலும் இன்னும் சிலகாலத்திற்கு அது பயன்படுமே தவிர,உண்மையிலேயேஇந்நாட்டின் விடுதலைக்குமுட்டுக்கட்டையாக விளங்கிவரும் பாஸிஸ்ட்கோஷ்டியைச் சார்ந்த தங்களைப்போன்ற வைதிகக்கும்பல்குட்டு சீக்கிரத்தில் அம்பலத்திற்கு வரும் என்பதுஉறுதி. அதற்காகவேஅறிஞர்அம்பேத்காரும்,பெரியார்இராமசாமியும், ஜனாப் ஜின்னாவும் தன்னலமற்ற சேவைசெய்து வருகின்றனர்.இம்மூன்று தலைவர்களின் பக்கபலமாய் இருப்பவர்கள் 20கோடிமக்களாவர்.இவர்கள்அனைவரும் பூணூலை ஆயுதமாக நம்பியிருக்கவில்லை என்பதைமட்டும் தாங்கள் அறிய வேண்டுகிறேன்.

**கூத்தரசன்.**

★

எஸ். ஆர். சிரோமணி அய்யர்,
அகரமாங்குடி.

**சாஸ்திர போதகரே!**

சேலம் பார்ப்பனர் மாநாடு தஞ்சை ஜில்லா அகரமாங்குடி பிராமணசமுகம் செய்துள்ள தீர்மானங்களைப் பத்திரிகைக்கு அனுப்பிவைத்திருக்கின்றீர்கள்.

அதைக்கண்ட எனக்குத்தங்களின் உண்மையான பிறவிக்கேற்ப இருக்கும் குணத்தைப்பற்றி மகிழ்ச்சியடைந்தேன். பார்ப்பனச்சமுகம்சீர்கெட்டதற்கு, ஆசாரம், அனுஷ்டானம், தெய்வபக்தி முதலியவைகளைவிட்டுவிட்டு, நாகரீகப்படிப்பு நடிப்பு, பேதாபேதமின்றிச் சாப்பாடு, முதலியவைகளே காரணம் என்று அவ்வறிக்கையில் காணக் கிடக்கின்றது.

இதுமிகமிகப் பொருத்தம்.தயவுசெய்து இவ்வுண்மைகளை, அடையாறு ருக்மணிதேவி, சர். அல்லாடி, சர். சி. பி. ராமசாமிஅய்யர், முதல்சதுர்க்கச்சேரிகளில் தாளம் போடும் கடைசி பார்ப்பனர்கள் வரைக்கும் தெரிவித்தால் பார்ப்பனச் சமுகம் தனது பழைய உண்மையான வைதிக நெறியைக் காப்பாற்றிக்கொள்ளலாம். அதேசமயத்தில் திராவிட நாட்டைப் பிடித்த பெரும் பீடை தொலைந்து மீண்டும் ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்று வாழ்ந்த திராவிட நாட்டு மக்களின்எல்லாவித நலனும் கைகூடும். எனவேவிரைவில் பார்ப்பன மாநாடுகூட்டி பார்ப்பனர் பூர்வீக வழக்கப்படி ஜாதிமுறை அனுஷ்டானம் கெடாமல், ஆரியநாடு சென்று "சிரஞ்சீவி"களாக வாழ்வது என்று தீர்மானியுங்கள். வணக்கம்.

**கூத்தரசன்.**

★

சண்டே டைம்ஸ்,
ஆசிரியருக்கு.

**ஆசிரியரே!**

வணக்கம். ஓஹோ, உமக்குப் புரியாதல்லவா அப்பதம், சரி, நமஸ்தே! ஏன், உமக்கு நமஸ்தே என்கிறீரோ? காரணம் இருக்கிறது. ஆரியராவது—திராவிடராவது அதெல்லாம் வீண்பேச்சு. சென்னையிலே, திராவிடர், திராவிடர் என்று ஒருகூக்குரல் கேட்கிறது: அது அர்த்தமற்றது என்று இங்குள்ள காங்கிரசார் ஓயாது கூறுகின்றனர்; வரலாற்றுக்கே மூடி போட்டு விடுகின்றனர். அவர்களின் ஆர்ப்பரிப்பைக்கேட்டு,திராவிடர்களிலேயே சிலரும், உண்மையிலேயே திராவிடர் என்பது வெறும் கற்பனைச் சொல்லோ என்று மயக்குகின்றனர். தாங்கள் அந்தமயக்கத்தைப்போக்கினீர்: அதற்காக உமக்கு என்வணக்கம். அதுவும் உம்மையும் அறியாது அந்த உதவிசெய்திருக்கிறீர், ஆகவே மகிழ்ச்சியுடன் என்வணக்கம்; அதிலும்எதையோ சொல்லப்போய் இதனைக் கூறினீர், ஆகவே ஆச்சரியமும் ஆனந்தமும் கலந்த வணக்கம். பெறுக- மகிழ்க.

என்ன செய்தோம் இந்த வணக்கம் பெற என்று யோசிக்கிறீரா? கூறுகிறேன் கேளும். உமது சண்டேடைம்ஸ், சென்றகிழமை இதழை எடும், கடைசி பக்கத்தைப்பாரும்!

பார்த்தேன்! அதிலேஎன்னஇருக்கிறது இந்திமொழிகூடாது என்று கூறும் உங்கள் போக்குதவறு என்றும்,இந்திமொழி கற்கவேண்டியது அவசியம் என்றும், கற்பது சுலபமென்றும் காந்தியார் தீட்டினபலகட்டுரைகளின் தொகுப்புதானே அது, இது உம்மவருக்குத் தாக்குதல் தானே இதற்கு ஏன் வணக்கம் செய்கிறீர், என்று கேட்கிறீரா?கேளும்!

இந்திகற்க எளிது, கற்கவேண்டுவது அவசியம், என்று காந்தியார் கூறுகிறார், என்று நீர், பிரசுரித்துள்ள கட்டுரையின் தலைப்பிலே, எமக்குச் சேவைசெய்திருக்கிறீர். **திராவிடர்கள்** இந்திகற்கவேண்டியதன் அவசியம் என்பதுதலைப்பு. இது காந்தியாசகம். ஆகவே, சென்னை மாகாணத்தவர் திராவிடர் என்பதை வடநாட்டுக்காந்தியார் அறிந்துஒப்புக்கொண்டிருக்கிறார், என்ற உண்மையை ஊராருக்கு அறிவித்து விட்டீர் இதுபெரிய உபகாரமல்லவா? **சென்னை மாகாண வாசிகளுக்கு, தென் இந்தியருக்கு** என்று காந்தியார் கூறவில்லையே; **திராவிடர்கள் இந்திகற்கவேண்டிய அவசியம்** என்றல்லவா கூறினார். அதனை அழகாக நாலுகாலஅளவிலே தலைப்புஆக்கித்தந்தீர், திராவிடருக்கும், அந்தவார்த்தையே கற்பனை என்று ஏய்க்கும் ஆரியருக்கும், விளக்கம் பிறக்கும் வகையில். சென்னை மாகாணத்தில் உள்ளவர்கள் திராவிடர்கள் என்பதைக் காந்தியார் ஒப்புக்கொண்டிருப்பதை, உம்மையும் அறியாமல், இந்திக்கு ஆதரவு தேடுவதாக எண்ணிக்கொண்டுகூறினீர்; இது இந்திக்கு ஆதரவு தேடுவதைவிட, திராவிடர் நாங்கள் என்ற உணர்ச்சியை எம்மவர் கொள்ளவும், திராவிடர் நாம்என்பதைக் காந்தியாரே உணர்ந்திருக்கிறார் என்ற உண்மையை நாடறியச்செய்யவும் உதவுகிறது. **இந்தியின் அவசியம்—காந்தியார் உபதேசம்; இந்திமொழி தென்னாட்டில் பரவவேண்டும்,**என்று எத்தனையோவிதமான தலைப்புக்கொடுத்திருக்கலாம், ஆனால் **திராவிடர் இந்தி கற்கவேண்டியதன் அவசியம்** என்று தலைப்புதந்தீர், தன்னை அறிந்து திராவிடம் இன்பமுறும் வகையில், அதற்காக என்நன்றி.

**கூத்தரசன்.**

★

**புதுக்கோட்டையில்**

**"திராவிட நாடு"**

**கிடைக்குமிடம்:—**

**அரு. பெரியண்ணன்,**
**செந்தமிழ்ப் பதிப்பகம்,**
**கீழ இராசவீதி, புதுக்கோட்டை.**

●

**சர். சி. பி. யோகம்!**

**மீண்டும் ஐந்துவருஷம் திருவாங்கூர் திவானாக, சர்.சி.பி. ராமசாமி ஐயர் இருப்பாராம்!**

## 'காலக்குறியைக் கண்டு!'

★

டில்லிசட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்குத்தலைவரான,தோழர் சரத் சந்திரபோஸ், காலக் குறியைக் கண்டு, கருத்தோடுநடந்து கொள்ளுங்களென்று,சர்க்காருக்குக்கூறினார். நியாயம்! அதனையே, நாம், சரத்சந்திரருக்கும் கூறுகிறோம், சர்க்கார்மட்டுமல்ல,காங்கிரசும்காலக் குறியைக்கண்டு, நடக்கக்கற்றுக் கொள்ளவேண்டும். இந்திய உபகண்டத்துத்துருப்புகளை, இந்தோ–சீனு, ஜாவா, ஆகிய இடங்களிலே, கிளம்பியுள்ள விடுதலைக் கிளர்ச்சியை அடக்கவும், பிரன்சு, டச்சு ஏகாதிபத்யங்களை நிலைநிறுத்தவும், உபயோகிப்பதைக் கண்டித்துக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஒட்டிக்காரசாரமாகப்பேசிய சரத் சந்திரர், களிப்புடன், கூறினார், காலப் போக்கை அறியவேண்டும் என்று. தீர்மானம் காங்கிரசார் கொண்டு வந்தது, ஆனால், முஸ்லீம் லீக், அதை முழுமனதுடன் ஆதரித்து, சர்க்காரின் போக்கைப் பலமாகக் கண்டித்தது. ஜனாப் ஜின்னாவின் கண்டன உரையிலேகிளம்பிய கனல், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் கண்களிலே புனலைக் கிளப்புவதாக இருந்தது. "வெட்கமில்லையா, எங்கள்வீரர்களை, இந்தக் காரியத்துக்குப்பயன்படுத்துகிறீர்களே!" என்றுசர்க்காரைக்கேட்டாரஜனாப் ஜின்னா. கண்டனத் தீர்மானத்தை லீக் ஆதரிக்கவே, ஓட்டுக்குவிடாமலேயேதீர்மானம்நிறைவேறியது. சர்க்காரின் போக்குக்கு எவ்வளவு பலமான கண்டனம் இருக்கிறது காணீர், இதுகாலக்குறிஎன்றுசரத் சந்திரர், இதுகுறித்துப்பேசினார். சரத்சந்திரரே கூடக் காலக்குறியைக்காணவேண்டும். காந்திக் குல்லா அணிந்தவர்களே கொலுவீற்றிருந்தனர்முன்பு, இப்போது "ஜின்னாகுல்லாய்" அணிந்தலீக்அங்கத்தினர்கள்,முஸ்லீம்களுக்கென்று தனித்தொகுதிமூலம்எவ்வளவுஸ்தானங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளனவோ அவ்வளவிலும் அமர்ந்துள்ளனர். அமர்ந்துகொண்டு, அரசாங்கத் துதிபாடுகின்றனரா? இல்லை! அசெம்பிளி ஆரம்பத்திலேயேசர்க்காரைச் சாடுகின்றனர். காங்கிரசுடன் தகராறுஇருப்பதால், காங்கிரசார் கொண்டுவரும் தீர்மானத்தை எதிர்க்கவேண்டுமென்றுகுரோதத்துடன் லீக்தலைவர் நடந்துகொண்டாரா? இல்லை! "பொதுஎதிரி"யைக் கண்டித்தார். லீகின்சக்தி,போக்கு, ஜனாப்ஜின்னாவின் நேர்மை, ஆகிய காலக்குறிகளைக் காங்கிரஸ் கண்டு நடந்துகொள்ளவேண்டாமா? சர்க்காரைக்கண்டிக்க முன்வரும் ஒரு தலைவரை, அவருடைய கட்சியை, கூசாமல், நெஞ்சறிந்த பொய்பேசுகிறோமேஎன்று அஞ்சாமல்,ஜின்னா ஏகாதிபத்யத்தின்ஏவலர், லீக் ஒரு அடிமைக்கட்சி, என்று ஏசுகின்றனரே காங்கிரசார்,முறையா, அழகா, அறிவுடைமையாகுமா? ஜனாப்ஜின்னாவின்போக்குடன், இந்தக்காங்கிரசாரின் போக்கை ஒப்பிடும் அறிவாளி யாராவது லீகைப்பழிக்கும் காங்கிரசாரை மதிப்பானா? இனியேனும் காலத்தின் குறிகளைக்கண்டு, காங்கிரசார்நடக்கக்கற்றுக் கொள்ளவேண்டும். பாகிஸ்தான், பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப்பரணி பாடப்படும் இடமாக இருக்குமே தவிர, "கவர்னர்,என்நண்பர், வழிகாட்டி, ஞானாசிரியன்"என்றுமுன்னாள்காங்கிரஸ்மந்திரிடாக்டர்ராஜன் அர்ச்சித்தாரே அதுபோன்று அடிபணிவோர் இடமாக இராது

## காந்தி பனிரெண்டு

★

[வீரனை அனுப்பினேன், காந்தி விஜய விசேஷத்தைக்கண்டு எழுதி அனுப்பும்படி. அவன் கவியாகி, இந்தக் "காந்தி பனிரெண்டு' அனுப்புகிறான்.

"காந்திபத்து" தானே, செய்யுள் இலக்கண முறைப்படி சரியாகும் என்று யோசிக்கவேண்டாம் ஆசிரியரே! இது செய்யுள் இலக்கண முறைப்படி அமைத்ததல்ல—செய்தியைச் செய்யுள் வடிவாக்கினேன். இருப்பதைத் திருத்தும் இனிய காரியத்தில் இடையறாது ஈடுபட்டுள்ள புலவர்கள், இதனையும் திருத்தித் தருவர்—பெறுக.

காந்தியாரைக் காணவந்திருந்த கூட்டத்திலே ஒருவருடன் உரையாடியதன் விளைவு இந்தச் செய்யுட் கடிதம். தொழுது நின்றார், சிலசொல்புகன்றேன், பதில்பேசாதுசென்றார். செய்தியைச் செந்தமிழ்ப்புலவர் ஒருவரிடம் சொன்னேன், அவர்செய்யுளாக்கித்தந்தார்—படித்து, மடித்துவைத்தேன் காகிதத்தை—அஞ்சலுக்கு அனுப்பத்தேடும்போது, காணோம். இது புதிதல்லவே, நெடுநாளாக இதுபோலத்தானே நமது கலைக் கருவூலம் கடலால் கொள்ளப்பட்டோ, கனலில்பட்டோ, காலச்செல் அரித்ததாலோ, கயவர் கிழித்தெறிந்ததாலோ காணமற்போய் விட்டன என்றுஎண்ணிக்கவலைப்பட்டு, முன்புபடித்த நினைவைத் துணைகொண்டு,நானுகவேஎழுதினேன். ஆகவேதான்புலவர்செய்யுள்இலக்கணமுறைப்படி செய்துதந்தகாந்திப்பத்து, காந்திபனிரெண்டு ஆயிற்று. ஆனால் என்ன? கருத்துக்கெடவில்லை!!"என்ற விளக்கக் கடிதத்துடன் வீரன் அனுப்பிய செய்திச் சுருணையை இதோ வெளியிடுகிறேன்.]

வருகிறார் காந்திஎன்றார் வருந்துவாழ்வு மென்றார்<br>
வரமது தந்துநம்மை வகைசெய்யும் வள்ளல்மென்றார்<br>
வறண்ட மென்வாழ்வுதன்னில் இருண்டிடும் இடரும்போக<br>
திரண்டிடும் ஆவலோடும் ஓடினேன் காந்திகாண.

தவமுனி தன்னைக்காணத் தவித்திடும் திரளைக்கண்டேன்<br>
பவ மறுத்திடுவோர்கூறும் பண்புரை கேட்கநின்றேன்<br>
கதருடைக் கூட்டம்அந்த காவிடை வண்டுபோல<br>
களித்திட வந்தார்காந்தி காரிருள்ஒழியும் என்றார்.

இரசித்திடின் ஒன்றேயாதும் இராமும் ரஹிமும்என்றார்<br>
இராட்டையே நாட்டைக்காக்கும் இரவிகுலச் சோமன்என்றார்<br>
பாட்டையே காணவேண்டின் பழங்குடி மக்கள்தம்மை<br>
நீட்டியேகரமும் தந்துநீ அணைத்திடுக மென்றார்.

ஏனப்பா எம்மான்பேச்சு மெப்படி இருக்குதென்றேன்<br>
தேனப்பா! தெவிட்டாதப்பா! தேகமே கூசுதப்பா<br>
ஆமப்பா! மென்றான்நண்பன், அதுசரிமென்றான் நேயன்<br>
போமப்பா பேதம்பிடை புன்மைகள் யாவும்என்றேன்.

புன்னகை புரிந்தான்நீசன், புகலொணுக்கோபம் கொண்டேன்<br>
புகன்றிடு காரணத்தை புகைந்திடு கோபம்தீர<br>
மென்றுமே நானும்கேட்க, என்னநான் சொல்லநீதான்<br>
இந்துந்தன் அஹிம்சைதன்னை இறந்திடச் செய்தாய்மென்றான்.

தவமுனிதந்தஅந்த தருமொழி புதிதோ? முன்னம்<br>
ஜடைமுனி பலரும்சொன்ன, சமரச கீதம்அன்றே!<br>
இவருமே இருபதாண்டாய் இதனையே இயம்பிநிற்க<br>
மெவருமே சென்றதில்லை இதுவழி அறிந்தும்மென்றான்.

நூலதை நூற்றேம்முன்பு, கோலது சாயக்கண்டோம்<br>
மேலதோ இக்காள்மெய்யாய் மேதினி தானேஉய்ய<br>
காலமாம் கனியின்சாற்றைக் காண்பதோ இராட்டைநூற்று<br>
போதுமோ பூசல்யாவும் பொன்மொழி கேட்டாய்நன்றாய்.

சமரசம் பேசப்பேச சமர்மிக மூண்டதேனே?<br>
அமரரே! மென்றுகூறி அடிபணிந் திருந்திட்டாரே<br>
ஆலைகள் தன்னில்ஆடை ஆகுதே நன்றப்போலே<br>
ஆகாது அரிஜன்பட்டம் அவலமே மென்கின்றரே.

இருபதுநல்ல ஆண்டாய் இவர்வழி கண்டார்பல்லோர்<br>
சென்றவர்உண்டோ அதிலே சேர்ந்தவர்தானும் உண்டோ?<br>
செம்பொனின் தன்மைதன்னை உரைத்திடத் தெரியுமாப்போல்<br>
இம்முனிதன்னின் கொள்கை செய்கையில் என்னும்மென்றான்.

கனிமொழி பேசலாதும் கண்மூடிக் காட்டலாதும்<br>
தனித்தனி சென்றபின்னர் தருவழி வேறேகொள்வார்<br>
தலைகளைச் சீவியேனும் தன்னலம் பேணிவாழ்வார்<br>
தருமமே பேசினோர்கள் தரணியில் பண்டும்உண்டு

வந்த இம்முனிவர்போல வந்தனர் வரிசையாக<br>
முந்தையோர் காலம்தொட்டு முப்புரி வாழக்கண்டோம்<br>
இப்புரி வாழவேண்டின், அப்புரி அறுதல்வேண்டும்<br>
செப்பிடும் காந்திமார்க்கம் செய்யுமோ இதனைமென்றான்.

காளையின் மொழியைக்கேட்டு கடுங்கோபம் கொண்டேன்ஆனால்<br>
மூளைக்த வேலைதானும் மூண்டுமே விட்டதாலே,<br>
நாளைக்கு வாரேன்மென்று நழுவியே வழிநடந்தேன்<br>
தாளையே வணங்குங்கூட்டம் தருமோ பதிலுப்மென்றான்.

## இந்துஸ்தான் நகரில்

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஆ. க: ஆமாம்! அதற்கென்ன சந்தேகம். ராஜாஜி என்ன சொன்னார் தெரியுமோ,...................

கா. க: எதைப்பற்றி? யாரிடம்?

ஆ. க: அதற்குள்ளேசந்தேகமா? மகாத்மாவின் புகழ்தான், தேசிய சக்தி என்று பத்திரிகை நிருபரிடம் சொன்னார்.

கா. க: ஆஹா! புதிதாகக்கண்டு பிடித்தாரோ இவர். மகாத்மாவின் விஜயத்தைத் தனக்குச் சாதகமாக உபயோகித்துக்கொள்கிறார் தந்திரக்காரர்.

ஆ. க: வீணனஅபவாதம். அவர் பதவிக்கே இந்தத்தடவை ஆசைப் படவில்லை தெரியுமா?

கா. க: ஆசை இல்லாததாலேதான், அலைகிறாராஊரெல்லாம், நீங்களாகப்பார்த்து மந்திரியாகவேண்டுமென்று சொன்னால், பாரத்தைச் சுமக்க நான் தயங்கமாட்டேன் என்று பேசிக்கொண்டு. வேறு யாராவது இங்கோ, வேறு எந்த மாகாணத்திலோ, இவர்போலப் பதவி, பதவி, பதவி, என்று பேசுகிறார்களா? வெள்ளையனேவெளியே போ! டில்லி சலோ! ஜெய் ஹிந்த் என்று மற்றவர்கள் பேச, இவர் மட்டும், நிர்வாகம், பதவி என்று பல்லவி பாடுவது ஏன்?

ஆ க: வீணாகத் தூற்றுதே. மகாத்மா விஜயத்தைத்தான் பயன் படுத்திக்கொண்டதாகப் பேசுவீர்கள் என்று தெரிந்துதான், மகாத்மாவுக்கு மாலை போடுவதற்குக் காமராஜரையே அனுமதித்தார்.

கா. க: இதிலேயே தெரிகிறதே உங்கள் யோக்யதை. அனுமதித்தாராம், அனுமதி—இவர் யார், தமிழ் நாட்டுக் காங்கிரஸ்தலைவருக்குஅனுமதிதர. மாலைபோட்டதை மட்டும் பிரமாதமாகப் பேசிவிட்டாயே, பேப்பரைப்பார்,என்னஎழுதிஇருக்கிறது என்று. மகாத்மா, அம்பத்தூரில் இறங்கினார், ஒருபுறம் ராஜாஜியும், மற்றோர்புறப் ஸ்ரீ கோபாலசாமி ஐயங்காரும் உடன்வர, மகாத்மா வந்தார் என்று, ஏன் இரண்டு பார்ப்பனர் பக்கத்திலே வந்தனர் என்று அவ்வளவு குறிப்பாக எழுதவேண்டும். ஆச்சாரியாருக்குத்தான் மகாத்மாவிடம் அபாரமான செல்வாக்கு இருக்கிறது என்று பொதுமக்களை ஏய்க்கத்தானே.

ஆ.க: சரி, சரி, அப்பா, நான் வாயை மூடிக்கொள்கிறேன்.

கா. க: நீயும் கூச்சல் போட்டுவிடேன், என்னை அடித்துவிட்டார்கள், அடித்துவிட்டார்கள் என்று.

(அதேசமயம்ஒருசிறுகுழப்பம்.)

"ஐயோ! கடித்துவிட்டானே!" என்று ஒருஇளமங்கை கூவுகிறள், பக்கத்திலே வந்த அவள் அத்தை, யாருடி? எங்கேடி? என்று கதற, ஒருகும்பல் சேர்ந்துவிடுகிறது. வெட்கத்துடன், அந்தமங்கை,'என்னடி அத்தே! கூச்சலிட்டுக் கும்பலைச்சேர்த்தூட்டே. வசந்தன் விளையாடிண்டே என் கன்னத்தைக் கடிச்சிட்டான், அதைச் சொன்னேன்" என்று கூறிக்கொண்டே, இடுப்பிலே இருந்த குழந்தை வசந்தனை, முத்தமிட்டாள்.

★

**மூன்னூலை அயலான் முறித்தான் நஞ்சால்**

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 கே. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன சௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O திருச்சி


## கிழக்கும் மேற்கும்

2-ம் பக்கத் தொடர்ச்சி

### மடங்கள்

மேல் நாட்டில் கிருஸ்துவ மதம் பரவியவுடன் மடங்கள் ஏற்பட்டன. அவைகள் கல்விக்கு ஆதாரமாய் இருந்தன. அதிலன்றோ டன்ஸ்டவும், உல்ஸியும் கல்விகற்றுயுயர்முள்ள மந்திரியானுர்கள். ஆனல் சில நாட்களுக்குள் சீர்கேடு தலைவிரித்தாடியது. பின் எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்திலே தாமஸ்கிராம் வெல் என்பவரின் ஆலோசனைப்படி மடங்கள் மூடப்பட்டன. இதனுல் எலிசபெத் ஆட்சிக்காலத்தில் பிச்சைக்காரர் தொல்லை அதிகமாயிற்று. எலிசபத்தே அத்தொல்லையை நீக்கினுள். ஆனல் நம் நாட்டிலோ முற்காலத்தில் ஏற்பட்ட மடங்கள் இன்று வரையில் சீர்திருத்தப்படாமலிருக்கின்றன. பணம் மடங்களில் முடங்கிக்கிடக்கிறது. அது ஓர் குடும்பத்துக்காகப் பயன்பட்டுவருகிறது. மடாதிபதிகளின் ஆதிக்கம் அதிகரிக்கிறது. இவைகளை எல்லாம் சீர்திருத்த வேண்டியது நம் கடமையன்றே.

### நூல் நிலையம்

மேலைத்தேயங்களில் நூல்நிலையங்கள்பல. அவைகள் வேண்டுவோருக்கு வேண்டியபோது வேண்டுவனவற்றைக்கொடுத்து அந்நாட்டு மக்களின் அறிவை வளர்க்கிறது. ஆனல் நம்நாட்டிலோ நூல்நிலையங்கள்சில, அவைகளில் அறியாமையை வளர்க்கும் நூல்கள் பல. இதனுல் நாம் முன்னேற முடியாமல் ஆளப்படுகின்றவர்களாக இருக்கின்ருேம். ஆகையால் அறிவுவளர்ச்சிக்குரிய நூல் நிலையங்களையும் கழகங்களையும் அமைக்கவேண்டுவது நம்கடமையாகிறது.

### கல்வி

மேல்நாடுகளில்100க்கு90பேருக்குமேல்படித்திருக்கிருர்கள். இவர்கள்வட்டுக்கல்விமாத்திரமல்லாமல் தொழிற்கல்வியும்படிக்கின்ருர்கள். அங்கே கல்வித்துறைகள் பலதிறத்தன. அவைகளுள் ஒவ்வொன்று ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத்தோன்றும். அப்பொருந்திய ஒன்றில்சிறப்புஅறிவுபெறவும், பிறவற்றில் பொதுஅறிவு பெறவும் அவர்கள் முயல்கின்ருர்கள். மேல்நாட்டில் தாய்மொழிப் பற்றுடையவராகவேவாழ்கின்ருர்கள். ஆனல் நம்நாட்டில் அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி என்பதறியார். நம்நாட்டில் நூற்றுக்குப் பத்துபேர்கூடப் படிக்கவில்லை, படிக்கவிரும்புவதுமில்லை. இங்கே தொழிற்கல்வியும் கிடையாது. தாய்மொழிப்பற்றே தாய்நாட்டுப்பற்று என்றும் அறியார். இதனுல் நாம்கல்விவளர்ச்சிக்குரிய காரியங்களைச் செய்யவேண்டியது நம்பொறுப்பன்றே.

### பெண் உரிமை

மேல்நாட்டில்ஆண்களுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை அங்குள்ளபெண்களுக்கும் உண்டு. பெண்களுக்குகல்வியிலும், விளையாட்டிலும், தொழிலிலும், உத்தியோகத்திலும், பேச்சுரிமையிலும் சமஉரிமை. அவைகள் தனித்துச் செல்லும்போதும் ஆணும் பெண்ணுமாகச்செல்லுகிருர்கள். போட்டார்களிலும், மின்சார வண்டிகளிலும் பெண்களுக்கு முதலில் இடம் கொடுக்கப்படுகிறது. அங்கு பெண்களைக் கண்யமாக நடத்துகின்ருர்கள். நம் நாட்டில் முற்காலத்தில்பெண்களுக்குச் சமஉரிமை கொடுக்கப்பட்டது. சான்ருக "ஒத்த நலமும் ஒத்தகுணமும்,ஒத்தகல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்" என்று நக்கீரனல்கூறப்பட்டிருப்பதால்,பெண்மகள்தனக்கினியகணவனைத்தானே தேர்ந்தெடுப்பது என்றே தெரிகிறது. "ஒத்தகல்வி" என்று குறிப்பிட்டதால் அக்காலத்தில் பெண் கல்வி சிறந்திருந்தது என்று தெரிகிறது. பெண்களுக்குச் சமஉரிமை கொடுக்கப்பட்டதிலைலன்றோ அவர்கள் விரஉணர்ச்சியுள்ளவர்களாகவும், அறவொழுக்கமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். ஆனல் பிற்காலத்தில் பெண்ணுரிமை கட்டப்பட்டது. பெண் கல்வி வாயில் மண்ணைப்போட்டார்கள். பலவழிகளிலும் தன் வாழ்விற்கு இன்றியமையாத கல்வி பெருமல்தனைக் கொடிய கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தார்கள். இதனுல் பெண்கள் அடிமைப்பட்டார்கள். இவ்வடிமை வாழ்வின் ஆணிவேரை அறுத்தெறிய வேண்டியது நம்பொறுப்பாகும்!

### கைத்தொழில்

மேல்நாட்டில், முற்காலத்தில் கைத்தொழில் நடைபெற்றது. மூன்ருவது ஜார்ஜ்காலத்திலே ஏற்பட்ட தொழிற் புரட்சியின் காரணமாக இயந்திரத் தொழிற்சாலைகள் ஏற்பட்டு, இயந்திரங்களினுலே பொருள்கள் சடுதியில் செய்யப்பட்டு வெளிவருகிறது. இதனுல் நாடுமுன்னேற்றமடைகிறது. ஆனல்நம் நாட்டில் இன்னும் இயந்திரச்சாலைகள் ஏற்படவில்லை. சிற்சில இயந்திர சாலைகள் ஏற்பட்டாலும் அவைகளில்பங்கெடுத்துக் கொள்வதற்கு நம்மவர்கள் முனைகின்ருர்களில்லை. உதாரணமாகஇயந்திரங்களின்வாயிலாக ஒருபணியில் ஆயிரக்கணக்கான கெஜநூற்கள் நூற்கப்படுகின்றகாலத்திலே நம்மவர்கள் வேறுவிதமாக நூல்நூற்கும் பழக்கத்தை மேற்கொள்கின்ருர்கள். இது அறிவுக்குப்பொருத்தமா? சிந்தித்துப்பாருங்கள்.

### பொதுஉடைமை

ஜெர்மனியிலே காரல் மார்க்ஸ் தோன்றிப் பொதுஉடைமையைப் போதித்தார். ஜெர்மானியர் வெறுக்கவேஅவர் ரஷியாசென்று பொதுஉடைமையைப்போதித்தார். பொதுஉடைமை 1917-ல் ஸார்மன்னரின் கொடுங்கோல் ஆட்சியில் இருந்து மக்கள் விலக ஏதுவாய் இருந்தது. இதனுல்தான் இன்று ரஷியா வல்லரசு நாடுகளில் ஒன்ருகவிளங்குகிறது. ஆனல் நம்நாட்டிலோ பொதுஉடைமை என்ருல் அதன்பொருள்யாது என்று கேட்கும் நிலையில் இருக்கிருேம்.

### விஞ்ஞானம்

மேல்நாட்டில் அறிவு வளர்ச்சிக்குரிய ஆராய்ச்சி நடைபெறுகிறது. இதனுலன்றே அவர்கள் அணுகுண்டுவைக்கண்டுபிடித்தார்கள். நம்நாட்டு மக்கள் புதிய ஆராய்ச்சியில் நுழைவதற்குப் பதிலாக இக்காலத்திலே,இவ்விருபதாம் நூற்ருண்டிலே புதுமையில்லாப்புராண ஆராய்ச்சியிலே தம் வாழ்நாளை வீணை கழிக்கின்றனர். அந்தோ வெட்கம்! வெட்கம்!

### நாகரிகம்

முற்காலத்தில் நமது நாட்டின் நாகரிகம் பலராலும் பேசப்பட்டது. சான்ருக இலக்கணமும், இலக்கியமும் நமக்குக்காட்சியளிக்கின்றன. இடைக்காலத்தில்நம் நாகரிகம் பரவி, கிரீஸ், இத்தாலி முதலிய இடங்களுக்குக் குடியேறியது. பின் இங்கிலாந்து, அமெரிக்கா என்ற மேல்நாடுகளுக்கு உந்நாகரிகம் குடியேறி, இன்று அவைகள் நாகரிகத்தில் சிறந்துவிளங்குகின்றன. கிழக்கே உதித்தசூரியன் மேற்கே செல்வதுபோலக், கிழக்கே தோன்றியமான நாகரிகம் மேற்கே சென்றுவிட்டது. என்னே நம் நிலை!

### முடிவு

இக்காலத்தில் உலவி வருகின்ற சீர்திருத்தக்கொள்கை, இகழினும், பழிக்கினும், எதிர்க்கினும், பகைக்கினும் உண்மை உயர்ந்தோங்கி வளரும் என்பது திண்ணம். தற்காலத்தைப்பற்றிச்சிறிதும் கவலைப்படாமல் முற்காலத்திலேயே மனவாசஞ்செய்யும் பெரியோர்களும் உளர். புதியவற்றைத் தழுவிக்கொள்வதில் மேல்நாட்டார் மிகத் துரித முடையவர்கள். எனவே, மேற்கூறியவற்றை எண்ணி "பழையனகழிதலும், புதியனபுகுதலும் வழுவலகால வகையினலே" என்ற தற்கேற்ப, இறந்த காலத்திலேயே மூழ்கிநில்லாமல், வேண்டுவன வற்றைக்கொண்டு, விலக்குவனவிலக்கி, நிகழ்காலத்தை நடத்தி எதிர்காலத்திற்கு ஆவன செய்தல் வேண்டும்என்றுகேட்டுக் கொள்ளுகிறேன்.


தந்தி:- "பருமார்க்" திருச்சி.





### நீத்தார் நினைவு

பொள்ளாச்சித்திராவிடர்கழகத் தலைவர் தோழர் பி. கே. கிருஷ்ணசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவி இயற்கையெய்தியதை முன்னிட்டு 11-1-46ல் நடைபெற்றநீத்தார் நினைவுநாளில் தோழர்கள் வ. சித்தையன், அ. பொன்னம்பலனர் ஆகியவர்கள்இரங்கல்சொற்பொழிவாற்றினர். இதன்நினைவாக"திராவிடநாடு" இதழுக்கு ரூபாய் இரண்டு நன்கொடை தரப்பட்டது.

### 15-12-45ல் நடைபெற்ற சென்னை சுயமரியாதை மாநாடு வரவு செலவு

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| நன்கொடை | 173 | 0 | 0 |
| வரவேற்புக்கட்டணம் | 73 | 0 | 0 |
| பார்வையாளர் கட்டணம் | 330 | 0 | 0 |
| வரவு | 576 | 0 | 0 |
| செலவு | 328 | 11 | 9 |
| கையிருப்பு | 247 | 4 | 3 |

பி. செல்வராஜ் - கே. கோவிந்தசாமி
காரியதரிசிகள்.

### வருந்துகிறோம்

கோயமுத்தூரில், நமது இயக்கம் நிலைபெறுவதற்குமுக்கியபங்கெடுத்து, பலவகையிலும் பணியாற்றி அவ்வூர்த்தோழர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளித்துவந்தநமது அருமைத்தோழர் ஏ. கிருஷ்ணசாமி பி. ஏ. அவர்கள் 10-1-46ல் மாரடைப்புநோயால்திடீரெனமறைந்து விட்டார் என்றமனம் பதைக்கும் செய்தியைக்கேட்டு வருந்துகிறேம்.

தன்னலம்பேணுதும், புகழ்விரும்பாதும் இயக்கப்பணிபுரிந்து வந்த ஒரு அன்பரைக் கோவை இழந்துவிட்டது, அந்நகருக்கே ஈடுசெய்ய முடியாத ஒருபெருநஷ்டமாகும். அவரதுபிரிவால் வருந்தும் அவரினருக்கும், இயக்கத்தோழர்களுக்கும் எமதுஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்து ஆறுதல்கூறுகின்ருேம்.

### திருமணம்

3-12-45ல் சிவகோட்டையில்நடைபெற்றசிவஞானத்துரை, அடைக்கலம்மாள் திருமணத்தில் பாண்டியன், கற்பகசுந்தரி வாழ்க்கைஒப்பந்தத்தை முன்னிட்டு "திராவிடநாடு" க்கு 1ரூபாய்நன்கொடை அளிக்கப்பட்டது.

9-12-45ல் மதுரை தோழர்பொ. பொன்னுச் சாமி தலைமையில் தோழர் க. துரைப் பாண்டியர்க்கும் தோழியர் மாலை யம்மையார்க்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக ரூபா 1. "திராவிடநாடு" வளர்ச்சிக்குத்தரப்பட்டது.

9-12-45ல் தோழர் மு.கருத்தக்கண்ணு தலைமையில் எஸ். துரைச்சாமிக்கும் நீதியம்மாளுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. "திராவிடநாடு" பத்திரிக்கைக்குரூபா 1. நன்கொடை தரப்பட்டது.

### ரஷ்யா குவித்துவைத்திருக்கும் தங்கம்

ரஷ்யா மிகவும் பரமரகசியமாக வைத்திருந்த விஷயங்களில் ஒன்றைப்பற்றிய தகவல் சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. சோவியத் யூனியனிடம் சுமார் 50 கோடி பவுன் முதல் 200 கோடி பவுன் வரை மதிக்கத்தக்கதங்கம்கையிருப்பிலிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்களிலே கூறப்படுவதாகநியூயார்க்டைம்ஸ் எழுதுகிறது. ஓக்ஹோட்ஸ்க்கடலுக்கும் கோலிமா நதியின் மேல்பாகத்திற்கும் மத்தியில் ஏராளமான தங்கம் கிடைக்கும் புதிய பிரதேசம் உட்பட ரஷ்யாவின் 19 பெரிய சுரங்கங்களிலிருந்து வருஷா வருஷம் சுமார் 4,21,90,000 பவுன் முதல் 7,03,28,000பவுன்வரைமதிப்புள்ள தங்கம் ரஷ்யாவுக்குக்கிடைத்துவருவதாகக் கூறப்படுகிறது.

சோவியத்தில் கையிருப்புத்தங்க மதிப்பும், வருஷாந்தர உற்பத்தி அளவும் சர்வதேசப் பொருளாதாரத் துறையிலேமிகவும்முடமாந்திரமான விஷயமாகவே வெகு நாட்களாக இருந்து வந்தன.

# ★ பசிபிக் தீவுகள் ★

[அமெரிக்காவின், பாதுகாப்புக்குத் தேவையான ஏற்பாடுகளுக்காக, "பசிபிக் தீவுகள்" அமெரிக்காவின் ஆதிபத்யத்தின் கீழ் எவ்வளவு காலம் இருந்துதீர வேண்டுமோ அவ்வளவு காலம் இருந்தாகவேண்டும்என்று அமெரிக்காக்குடிஅரசுத் தலைவர், ட்ருமன், ஜனவரி 15-ந்தேதி பேசியிருக்கிறார்.

இக்கட்டுரையில், அவர்குறிப்பிடும் அந்தப்பசிபிக்தீவுகளைப் பற்றியபல விவரங்கள் விளக்கப் பட்டுள்ளன.]

## மக்கள் தொகை

பசிபிக்கில் மேற்கே நியூகினியா, பாலாவிலிருந்து கிழக்கேபிரஞ்சுக்குச்சொந்தமாக விளங்கும்ஹாவாய், கிழக்குத்தீவுகள்வரை பசிபிக்தீவுகள் பரவியிருக்கின்றன. இத்தீவுகளின் பரப்பளவு உலகபரப்பளவில் எட்டில் ஒருபங்கு. பசிபிக்தீவுகளின் ஜனத்தொகை சுமார் 25 லட்சம்தான் இருக்கும். அதாவது வடமேற்கு எல்லைப்புறமாகாணத்தின் ஜனத்தொகையை விடக் குறைந்த ஜனத்தொகையைக் கொண்டிருக்கின்றன. இத் தீவுகளில் அதிகஜனநெருக்கமுள்ள தீவுநவ்ரு. இத்தீவின் மொத்தப்பரப்பளவு 8,5 சதுரமைல்; ஜனத்தொகை 3,583. ஜன நெருக்கம் குறைந்ததீவு டச்சு நியூகினியா தீவு. ஆனால் இத்தீவின் பரப்பளவு பெரிது. இதன் பரப்பளவு 1,60,000. சதுரமைல். ஜனத்தொகையோ 4—லட்சத்துக்குக் குறைவு. ஆஸ்திரேலியாவின் ஆதிக்கத்திலுள்ள நியூகினியாவின் இதர பகுதியின்விஸ்தீரணம் 93,000சதுரமைல். பாபுவாவின் விஸ்தீரணம் 90,000 சதுரமைல். திபேத்திலுள்ள ஜனநெருக்கத்தைவிட ஐஸ்லாந்திலுள்ள ஜனநெருக்கத்தை விடக் குறைந்த அளவிலே இருக்கிறது. லிபியாவில் உள்ள ஜன நெருக்கத்தைவிடத் தென்மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஜனநெருக்கத்தை விடச்சிறிது அதிகமாகவும் இருக்கிறது.

இத் தீவுகளில் ஜன நெருக்கம் குறைந்திருப்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. இத்தீவுகள் நீர்வளம் நிலவளம் அற்றவை என்று எண்ணுவதற்குமில்லை. ஐஸ்லாந்து போன்றோதிபேத்தைப் போன்றோ அல்லது லிபியாபோன்றோவறண்டகாடு என்றோ உற்பத்தியற்றபிரதேசமென்றோ கருதுவதற்கில்லை. இத்தீவுகளில் புதையுண்டுகிடக்கும் இயற்கைப் பொருள்களையும் அத்தீவுகளின் நிலஅமைப்பையும் சரிவரஉணரவில்லை யென்றே தெரிகிறது. இருந்தபோதிலும், சிலபகுதிகள் உலக மக்களால் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன. ஐரோப்பாவிலுள்ளஎல்லாநாடுகளும் ஏறக்குறைய இத்தீவுகளை ருசிபார்த்து வந்திருக்கின்றன.

18-ம் நூற்றாண்டின்துவக்கத்திலிருந்து பிரிட்டிஷார் இத்தீவுகளில் கவனம் செலுத்திவருகிறார்கள்.


கடந்த மகாயுத்தத்தின் முடிவில் தங்களுக்குக்கிடைத்த ஜெர்மன் தீவுகளில் ஜப்பான் குடியேறஆரம்பித்தது. சீனர்களும் குடியேற ஆரம்பித்தனர்- பேர்ள் துறைமுக சம்பவத்திற்கு முன்னிருந்தே அமெரிக்கா இத்தீவுகளில் கருத்தைச் செலுத்தி வந்தது. அமெரிக்காவின் நாற்பத்தொன்பதாவது மாகாணமாக ஹாவாவைச்சேர்த்துக்கொள்வதாக ஒரு உத்தேசம் இருந்து வந்தது.

பிரிட்டிஷ் இந்தியாவும் இத்தீவுகளில் ஒன்றாகிய பிஜியில் முக்கிய பங்கு கொண்டது. இன்று அத்தீவில் ஒருலட்சம் இந்தியர்கள் குடியேறியிருக்கின்றனர். யுத்தத்திற்கு முன் இத்தீவுகள் ஏழு ராஜ்யங்களின் ஆதிக்கத்தில் இருந்துவந்தன. அதாவது, பிரிட்டன், பிரான்சு, ஆஸ்திரேலியா, டச்சு, ஜப்பான், அமெரிக்கா, ஆகியவைகளின்ஆதிக்கத்திலிருந்து வந்தன. ஆஸ்திரேலியாவுக்கு அதிகபங்கு.

## வர்த்தகம்

இத் தீவுகளின் வர்த்தகம் வெளிநாடுகளுக்குத் திறந்தேயிருந்து வந்திருக்கிறது. 1938ல் இத் தீவுகளின் வர்த்தகம் 115-கோடி ரூபாய் இத்தொகையில் 56-கோடிக்கு மேல் இறக்குமதி; மீதி ஏற்றுமதி. இவ்வர்த்தகத்தில் பெரும்பகுதி ஹாவாய்க்குச் சொந்தம். இப்பகுதிதான் வர்த்தகத்துறையில் முன்னேற்றமடைந்திருக்கிறது. ஹாவாய்தீவை நீக்கிவிட்டால் இதரதீவுகளின்வர்த்தகம் 32-கோடி ரூபாய்க்குள்ளாகவேயிருக்கும். மற்றும் ஹாவாய் தீவில் வர்த்தகத்தைப் பொறுத்த மட்டில் நாட்டுமக்களுக்குசம்பந்தமில்லை. அவ்விவகாரம் தனி.

அடுத்தாற்போல் பசிபிக்தீவுகளிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முதன்மையாகவிளங்கக்கூடியதுகொப்பரைத்தேங்காய். 1938ல் இத்தீவுகளிலிருந்து 2,14,000 டன் கொப்பரை ஏற்றுமதி யாகியிருக்கின்றன. இத்தீவுகளின் முக்கிய விவசாய உற்பத்திப் பொருளும் கொப்பரை. இரண்டாவது கரும்பு உற்பத்திக்கு பிஜி, ஹாவாய், ஜப்பானிய பழைய பிரதேசங்களும் முக்கியமானவைகள். காப்பி உற்பத்தி வெகுநாட்களாக நடைபெற்றுவருகிறதென்றாலும் ஆரம்பதசையிலேயிருந்து வருகிறதென்று சொல்லலாம். அடுத்தாற்போல் முக்கிய வருமானம் தரக்கூடியது பழங்களின் உற்பத்தி. சென்ற தலைமுறையில் உலகுக்குவாழைப்பழத்தையும் அன்னசிப்பழத்தையும் புகுத்தியவைகள் இத்தீவுகளாகும். பிட்காயரன் தீவில் ஆரஞ்சுபழம் உற்பத்திதான் முக்கிய வருமானம் தருவதாக இருக்கிறது.


ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ 4. ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.
எமது சோல் ஏஜண்ட்:—
M. E அப்துல் ரகிமான் சாகிபு, புகையிலை வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணமலை.

தாதுப்பொருள் உற்பத்தியிலும் இத்தீவுகள் வறண்டவைகள் அல்ல. உலக உற்பத்தியில் குரோமியம் 11 சதவிகிதமும், நிக்கல் 12-சதவிகிதமும், 40-லட்சம்டாலர் மதிப்புள்ள கந்தகமும்உற்பத்தியாகிறது. இவை தவிர தங்கமும் இதர தாதுப் பொருள்களும் சிறிது கிடைக்கின்றன.

கடந்த இருதலைமுறையாகப் பல துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தபோதிலும், இன்னும் முன்னேற்றத்திற்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. சில தீவுகள் தீண்டப்படவேயில்லை. நியூகினியாவிலும், பாபுவாவிலும், சாலமனிலும்ஏராளமானபிரதேசங்கள் பயிர் செய்யப்படாமலே இருக்கின்றன. இன்னும்மற்றத்தீவுகளில் விவசாய அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதிலும் குறிப்பாகக் கொப்பரைஉற்பத்திவிருத்தி செய்யப்பட வேண்டும். அங்குள்ள தென்னை மரங்கள் பலதலைமுறைகள் ஆய்விட்டன. அவைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். அத்தீவுமக்களின் முக்கிய உணவு தேங்காயிலிருந்துஎடுக்கப்படும் ஒருவித் பொருள். இதை நல்ல முறையில் தயார்செய்தால் நல்ல லாபமுள்ளதொழிலாகவிளங்கும்.

பழங்களின் உற்பத்தி அபிவிருத்தியடைந்திருந்தாலும்மேலும்அபிவிருத்தி செய்யவேண்டியிருக்கிறது. இங்கிலாந்தில் நிலக்கரி பொருளாதாரத்துறையில் புரட்சியை யுண்டு பண்ணியதுபோல், இத்தீவுகளில் இப்படி உற்பத்தி பொருளாதாரத் துறையில் புரட்சியை யுண்டுபண்ணும். மார்க்கட்வசதியுமிருந்துவருகிறது. பழங்களை வெளிநாடுகளுக்குப்பக்குவம்செய்து அனுப்ப ஆரம்பித்ததிலிருந்து பழங்கள் உற்பத்தியாகும் பிரதேசம் பெருகலாயிற்று. ஹாவாய் தீவிலிருந்து அன்னசிப்பழம் முக்கியமாகஏற்றுமதியாகிறது. பிஜி, மேற்குசாமால், குக்தீவுகள், நீயூ, டோங்கா, ஆகிய தீவுகள் வாழைப்பழம் உற்பத்தி செய்கின்றன. இவைகள் ச்ரிவரப் பக்குவம்செய்து ஏற்றுமதி செய்யப்படுமேயானல், இவ்வுற்பத்தி பெருகவும் இத்தீவுகளின் பொருளாதாரநிலை உயரவும் வழிகள் உண்டு. ஹாவாயிலும் குக்தீவுகளிலும் காய்கறி உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்ய பரீட்சைப்பார்க்கப்பட்டது. இதிலும்வெற்றியேகாணப்பட்டது. உருளைக்கிழங்கும் இதர குளிர்பிரதேசப்பயிர்களும் உற்பத்திசெய்து பார்க்கப்பட்டது. ஆனல் வியாபாரத்திற்குத் தகுந்த முறையில் உற்பத்தி செய்யவில்லை.

## எண்ணெய் உற்பத்தி

அடுத்த முக்கியதாதுப்பொருள் எண்ணெய். இதுதான் இந்தயுத்தத்தில் பலநாடுகளின் 'தலைவிதியை' நிர்ணயம் செய்ததென்னலாம். இத்தீவுகளின் பெரும்பகுதிகளில் எண்ணெய் இருப்பது அறியப்பட்டது. நியூகலடோனியாவில், பிரிட்டிஷ், ஆஸ்திரேலியா, அமெரிக்கா கம்பெனிகள் எண்ணெய் எடுத்துவருகின்றன. இத்தீவுகளில் அதிக எண்ணெய் நியூகினியாவில் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது உலகில் பெரியஉற்பத்திஸ்தலமாக விளங்கும் என்றும் நம்பப்படுகிறது. போர்னியாவில் கிடைக்கிறஅளவுக்கு இங்கும் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. இதனல் விமானபோக்கு வரவிற்குப் பெரிதும்பயன் ஏற்படும். கைத்தொழில் நிலையங்கள்நிறுவுவதற்குஉதவியாக இருக்கும். உள்நாட்டு வர்த்தகம் வளர வளர உள்நாட்டுப் போக்குவரவு மார்க்கங்கள் விருத்தியடையும்.

விவசாய அபிவிருத்தியைப்போல் தாதுப்பொருள் அபிவிருத்தியைப் பொறுத்திருக்கிறது. இத்தீவுகளின் எதிர்கால முன்னேற்றம் நியூகினியாவில் தங்கம், நிலக்கரி, செம்பு, வெள்ளி, பிளாட்டினம், இரும்பு, கிராப்பைட் முதலிய இதர தாதுப் பொருள்களும் இருக்கின்றன என்பது தெரிந்துவிட்டது. பிரஞ்சு நியூக்லோபோனியாவில் நிக்கலும், குரோமியமும் வெட்டி யெடுக்கப் படுவதுடன், இரும்பும், மாங்கனீஷியாவும் ஏராளமாக இருக்கின்றன. நியூஹெபிரைட்ஸில் தங்கம், குரோம், இரும்பு, தாமிரம், முதலியபலதாதுப்பொருள்கள் இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இவ்வளவு தாதுப் பொருள்கள் கிடைப்பதாக இருந்தும் வெட்டி யெடுப்பதற்குவேண்டியஏற்பாடுகள் செய்யவில்லை,

1888-லிருந்து தங்கம் வெட்டி யெடுக்கப்படுகிறதென்றாலும், பாபுவாவில்இன்னும்எவ்வளவோ இருக்கிறது. அங்கு இன்னும் தொட்டுப் பார்க்கவில்லை.

இத்தீவுகளில்மூலப்பொருள்கள் ஏராளமாகக்கிடைக்கிறதென்பதும், விவசாய விருத்திக்கு நல்ல சந்தர்ப்பமிருக்கிறதென்பதும் விளங்கும். இவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவே ஒவ்வொரு நாடும் போட்டியிடுகின்றன.


கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
எ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
வண்ணாரப்பேட்டை, சென்னை.

★ தடைக்கற்கள் உண்டு! தடந்தோள் எங்கே! ★

Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.